# වාර්ෂික කාර්ය සාධන වාර්තාව
# வருடாந்த செயலாற்றுகை அறிக்கை
# Annual Performance Report

# 2013








**වැවිලි කර්මාන්ත අමාත්‍යාංශය**

**பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு**

**Ministry of Plantation Industries**

# வருடாந்த செயலாற்றுகை அறிக்கை
# 2013

பெருந்தோட்டக் கைத்தொழில்

அமைச்சின் 2013 ஆண்டுக்கான

வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

2002 செப்டம்பர் 12 ஆம் திகதி

அரசாங்க நிதி சுற்றறிக்கை இலக்கம்

402 இன் ஆலோசனை பிரகாரம்

தயாரிக்கப்பட்டுள்ளது.

# உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| 1 | பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு | 1 |
| | அறிமுகம் | 1 |
| | நோக்கு, தொழிற்பாடு | 4 |
| | பிரதான எதிர்பார்ப்புக்கள் | 5 |
| | தந்திரோபாய அபிவிருத்தி இலக்கு | 6 |
| | செயற்பாட்டு குறிகாட்டி | 7 |
| | 2013.12.31 திகதி அன்று பணிமனை | 8 |
| | 2013ஆண்டில் இலக்கை அண்மித்தல் | 10 |
| | 2013ஆண்டின் வரவுசெலவு முன்மொழிவுகளை அமுல்படுத்தல் | 11 |
| | 2013ஆண்டில் அமுல்படுத்தப்பட்ட முதன்மையான அபிவிருத்தி விடயங்கள் | 12 |
| | வாழ்வெழுச்சி தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் - 2013 | 13 |
| | 2013ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ஏனைய நிகழ்ச்சித்திட்டங்கள் | 14 |
| 2 | நிதி ரீதியிலான முன்னேற்ற மீளாய்வு | 17 |
| 3 | துறைசார் மீளாய்வு | 18 |
| | தேயிலைத் துறை | 18 |
| | இறப்பர் துறை | 27 |
| | கட்டுபொல் (பார்ம் எண்ணெய்) துறை | 34 |
| 4 | வெளிநாட்டு கடன் மூலம் அமுலாக்கப்பட்ட அபிவிருத்தி கருத்திட்டங்கள் | 36 |
| | சிறு பெருந்தோட்ட முயற்சியாண்மை அபிவிருத்தி செயற்றிட்டம் | 36 |
| 5 | பிரிவு ரீதியான செயலாற்றுகை | 43 |
| | நிர்வாகப் பிரிவு | 43 |
| | கணக்கியல் பிரிவு | 48 |
| | உள்ளக கணக்காய்வுப் பிரிவு | 50 |
| | அபிவிருத்திப் பிரிவு | 52 |
| | திட்டமிடல் பிரிவு | 55 |
| | பெருந்தோட்ட முகாமைத்துவ கண்காணிப்பு பிரிவு | 57 |
| | தேயிலை, இறப்பர் மற்றும் தெங்குத்தோட்ட ( துண்டாடுதலை கட்டுப்படுத்தல் ) சபை | 63 |

# பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு

## அறிமுகம்

“மஹிந்த சிந்தனை தொலைநோக்கு” அபிவிருத்தி தந்திரோபாயத்தினூடாக கட்டியெழுப்ப எதிர்பார்க்கப்படும் நிலையான முழு பொருளாதாரம், சமூக, சுற்றாடல் அபிவிருத்தி இலக்கை அடைவதற்காக பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சுக்கு சிறப்பான பணிப்பொறுப்பு உரித்தாகவுள்ளது. அரசினால் அமுல்படுத்தப்படவுள்ள தேசிய கொள்கைக்கமைவாக அமைச்சு மற்றும் அதற்குரிய நியதிச்சட்ட நிறுவனங்களில் தேயிலை, இறப்பர் ஆகிய விடயங்களுக்குரிய கொள்கை, நிகழ்ச்சித்திட்டம் மற்றும் கருத்திட்ட ஒழுங்கமைப்பு, அமுல்படுத்தல் மற்றும் நடைமுறைப்படுத்தல், தேயிலை, இறப்பர் கைத்தொழில் அபிவிருத்தி மற்றும் ஆராய்ச்சி தொடர்பான செயற்பாடுகள், தேயிலை, இறப்பர், தென்னந் தோட்டங்கள் துண்டாடப்படுதல் தொடர்பான அனுமதிப்பத்திரம் வழங்குதல் மற்றும் கட்டுப்படுத்தல் போன்ற பணிகள் முக்கியமாக இந்த அமைச்சினால் மேற்கொள்ளப்படுகின்றது.

மேலும், வேறு அமைச்சுக்களுக்கு நிலையாக உரித்தளிக்கப்படாத பெருந்தோட்டப் பயிர்களின் விரிவாக்கல் மற்றும் ஆராய்ச்சி நடவடிக்கைகளும் இந்த அமைச்சுக்கு உரியதென்பதினால் பாம் எண்ணெய் (ஒயில்) பயிர்ச்செய்கை விரிவாக்கல் நடவடிக்கைகளும் இந்த அமைச்சின் கீழ் அமுல்படுத்தப்படுகின்றது.

இப்பணிகளை நிறைவேற்றுவதற்காக இலங்கைத் தேயிலைச் சபை, இலங்கைத் தேயிலை ஆராய்ச்சி நிறுவனம், சிறு தேயிலைத் தோட்ட அபிவிருத்தி அதிகாரசபை, தேயிலை சக்தி நிதியம், வரையறுக்கப்பட்ட களுபோவிட்டியான தேயிலை தொழிற்சாலை கம்பனி, இறப்பர் அபிவிருத்தித் திணைக்களம், துருசவிய நிதியம், தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனம், மற்றும் தேயிலை, இறப்பர், தென்னந்தோட்ட (துண்டாடல் கட்டுப்பாடு) சபை ஆகிய நிறுவனங்கள் இந்த அமைச்சின் கீழ் செயற்படுகின்றன. இதற்கு மேலதிகமாக விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியம் (IFAD) ஊடாக இலங்கை அரசினதும் பங்களிப்புடன் நடைமுறைப்படுத்தப்படும் சிறியளவிலான பெருந்தோட்ட முயற்சியாண்மை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டமும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சின் விடயப்பரப்பில் உள்ளடங்குகின்றது.





## மஹிந்த சிந்தனை தொலைநோக்கு .....




- ❖ தேயிலைக் கலவையையும், பொதியிடலையும் மேம்படுத்துவதன் ஊடாக இலங்கையை சந்தைப்படுத்தலில் மைய நிலையமாக மாற்றுதல்.
- ❖ பசுந்தேயிலையை பிரபல படுத்துவதன் ஊடாக தொடர்ந்தும் தேயிலையை ஜனரஞ்சமாக்கும் கொள்கைகளுக்கு அனுசரணை அளித்தல்.
- ❖ தேயிலை, தெங்கு மற்றும் இறப்பர் உட்பட ஏனைய ஏற்றுமதி பொருட்களுக்காக அதிக விளைதிறன் உள்ள உயர்வகை பயிரினங்களை அறிமுகப்படுத்தல்.
- ❖ அனைத்து ஏற்றுமதி பயிர்களுக்காக மானிய முறைகைளை அறிமுகப்படுத்தல்.
- ❖ அனைத்து பெருந்தோட்டப் பயிர்களுக்கான உர மானியத்தை *விரிவுபடுத்தல்.*
- ❖ குத்தகை அடிப்படையில் இயங்கிவரும் தோட்டக் கம்பனிகளில் உற்பத்தித்திறனை மேம்படுத்தி அவற்றில் பணியாற்றும் ஊழியர்களின் தொழில் பாதுகாப்பையும் வருமான மட்டத்தை மேம்படுத்தும் உயிர் பல்வகையினத்தையும் நீர் வளங்களையும் பாதுகாக்ககூடியவாறு சூழல் நேயமிக்க நீண்ட கால முதலீடுகளில் ஈடுபடுத்தல்.

(மஹிந்த சிந்தனை தொலைநோக்கு)



# வரவு செலவுத்திட்ட உரை - 2013

“சிறு தோட்ட உரிமையாளர்களுக்காக தேயிலை மீள்பயிரிடல் செய்து மேம்படுத்துவதற்காக வழங்கப்படும் மானியம் 01 ஹெக்டேயருக்கு 300,000 ரூபாவிலிருந்து 350,000 வரை 2013 இலிருந்து அதிகரிக்க முன்மொழிகின்றேன். புதிய பயிர்ச்செய்கையை மேம்படுத்துவதற்காக வழங்கப்படும் மானியம் 150,000 இருந்து 250,000 வரை அதிகரிப்பதற்கும் முன்மொழிகின்றேன். சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்களின் மிகப் பழைய தேயிலைப் பயிருக்காக புதிய தேயிலைப்பயிரை அறிமுகப்படுத்துவதற்காக கட்டங்களாக அந்த செயற்பாட்டுக்கு தூண்டுவதற்கு நான் முன்மொழிகின்றேன்”.

“சிறு தோட்டங்களில் தேயிலை கொழுந்து பறிக்கும் உற்பத்தித்திறனை விரிவாக்குவதற்காக புதிய இயந்திர உபகரணங்களை பிரபலப்படுத்துவதற்காக உதவி வழங்க 100 மில்லியன் ரூபாவை ஒதுக்கீடு செய்வதற்கும் முன்மொழிகின்றேன்”.

“கடந்த வரவுசெலவுத் திட்டத்தில் முன்மொழிந்தவாறு பெருந்தோட்டக் கம்பனிகளின் கீழுள்ள 25,000 ஏக்கர் மீள பகிர்ந்தளிப்பதற்காக அடையாளம் காணப்பட்டுள்ளது. 30 வருட குத்தகையில் சிறு தோட்ட பயிர்ச்செய்கையை மேம்படுத்துவதற்காக குறைந்த வருமானமுடைய முயற்சியாண்மையான 12500 இளைஞர்களுக்கு இக்காணி பகிர்ந்தளிக்க நடவடிக்கை எடுக்கப்படும். அந்த இளைஞர்களுக்கு காணி பண்படுத்தல் மற்றும் பயிர்ச்செய்கையை மேம்படுத்துவதற்குத் தேவையான உதவி வழங்குவதற்காக 100 மில்லியன் ரூபாவை ஒதுக்கீடு செய்ய முன்மொழிகின்றேன்.”

“தோட்டக் கம்பனிகளின் கீழுள்ள பெருந்தோட்டக் கைத்தொழிலுக்காக நீண்டகால நிதியுதவி வழங்குவதற்கு சர்வதேச அபிவிருத்தி நிறுவனத்துடன் நாம் திட்டமிடுகின்றோம். இருப்பினும் இக்கடனுதவியானது தற்போது தமது பயிர்களில் உயர் தரத்தை பேணிக்கொண்டு உள்ளூர் உற்பத்திகளுக்கு பெறுமதி சேர்த்து ஏற்றுமதியை அதிகரித்த தொழிலாளர்களுக்கும் சூழவுள்ள கிராமங்களின் நலன் நடவடிக்கைகளுக்காகவும் செயற்பட்டுள்ள பெருந்தோட்டக் கம்பனிகளுக்கு மட்டுமே வழங்கப்படும். எனவே 1992 இற்கு பிந்திய காலப்பகுதியில் தோட்ட கம்பனிகளின் செயற்பாடு மதிப்பீட்டுக்கு உட்படுத்த எதிர்பார்க்கின்றேன். மிகவும் நன்றாக செயற்பட்டுள்ள கம்பனிகளுக்கு குத்தகை காலத்தை நீடிப்பதற்கும், தேவையான நீண்டகால கடன் வழங்கவும் நடவடிக்கை எடுப்பதுடன் எதிர்பார்த்த இலக்கை அடைந்துள்ள கம்பனிகளில் உயர்வான செயற்திறனை ஏற்படுத்த தேவையான நிபந்தனைகளை விதிப்பதற்கும் முன்மொழிகின்றேன்”.

“இயற்கை உரத்தை பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படும் தேயிலை ஏற்றுமதியை ஊக்கவிப்பதற்காக அறவிடப்படும் வருமானவரியை நூற்றுக்கு 12 சதவீதம் வரை குறைப்பதற்கும் முன்மொழிகின்றேன்”.

“இறப்பர் உற்பத்திகளின் ஏற்றுமதி வருமானம் தற்போது தேயிலையிலிருந்து கிடைக்கும் வருமானத்தின் அளவை எட்டுகிறது. மொனராகலை அம்பாறை, வவுனியா, முல்லைத்தீவு பகுதிகளில் சிறு தோட்ட உரிமையாளர்களை இலக்காக கொண்டு இறப்பர் பயிர்ச்செய்கை விரிவாக்கல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. உயர் தரத்துடனான நாற்று வகைகளை மேம்படுத்துவதனூடாக இறப்பர உற்பத்தியின் உற்பத்திறனை அதிகரிப்பேன். 2.5 ஏக்கர் வரையுள்ள சிறு தோட்டங்களில் மேலதிக வருமானம் ஈட்டுவதற்காக இறப்பர கன்றுகளை இலவசமாக வழங்க வாழ்வெழுச்சி மூலம் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

## நோக்கு

பெருந்தோட்டக் கைத்தொழிலின் அபிவிருத்தி ஊடாக தேசிய சுபீட்சத்தை உருவாக்குதல்.

## பணிக்கூற்று

பொருளாதார, சமூக, சுற்றாடல் ரீதியில் உறுதிப்படுத்தப்பட்ட பெருந்தோட்டத் துறை ஊடாக பெருந்தோட்டக் கைத்தொழிலின் உற்பத்தித்திறன், இலாபமீட்டும் தன்மை நிலைபேற்றுத் தன்மையை மேம்படுத்துதல்.







MINISTRY OF PLANTATION INDUSTRIES

ACTION PLAN – 2013

55/75, Vauxhall Lane,
Colombo - 02

# பிரதான எதிர்பார்ப்புக்கள்

“மஹிந்த சிந்தனை தொலைநோக்கு” இற்க்கு அமைய 2010 ஆண்டில் நிதி, திட்டமிடல் அமைச்சினால் தயாரிக்கப்பட்ட இலங்கை அரச கொள்கை சட்டத்துக்கு அமைவாக பெருந்தோட்டத் துறையின் அபிவிருத்திக்காக கீழ்வரும் அபிவிருத்தி செயற்பாடுகள் அமுல்படுத்தப்படுகின்றது.



# தந்திரோபாய அபிவிருத்தி இலக்கு

முஹிந்த சிந்தனை கொள்கைகளுக்கு சமாந்தரமாக பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சினால் அடையாளம் காணப்பட்ட தந்திரோபாய அபிவிருத்தி இலக்கு கீழ்வருமாறானதாகும்.



# செயற்பாட்டு குறிகாட்டி

அமைச்சின் இடைக்கால அபிவிருத்தி இலக்குகளை அடையும் நோக்குடன் 6 செயற்பாட்டு குறிகாட்டிகள் அடையாளம் காணப்பட்டுள்ளது.



# 2013.12.31 ஆம் திகதி அன்று பணிமனை

| தொ இல | பதவி | சேவை | தரம் / வகுப்பு | அங்கீகரிக்கப்பட்ட ஆளணி | தற்போதுள்ள ஆளணி |
|---|---|---|---|---|---|
| **சிரேஷ்ட மட்டம்** | | | | | |
| 01 | செயலாளர் | | | 1 | 1 |
| 02 | மேலதிக செயலாளர் | இ.நி.சே | (விசேட) | 2 | 1(விஷேட)<br>1 (1 வகுப்பு) ப.க |
| 03 | பணிப்பாளர் | இ.நி.சே | 1 | 2 | 1 |
| 04 | பணிப்பாளர் | இ.நி.சே | 1 | 1 | 1 |
| 05 | சிரேஸ்ட உதவி செயலாளர் | இ.நி.சே | 1 | 1 | 0 |
| 06 | பிரதம கணக்காளர் | இ.க.சே | 1 | 1 | 1 |
| 07 | பிரதி பணிப்பாளர்/உதவி பணிப்பாளர் | இ.நி.சே | 11 / 111 | 3 | 2 |
| 08 | பிரதி பணிப்பாளர்/உதவி பணிப்பாளர் | இ.தி.சே | 11 / 111 | 1 | 1 |
| 09 | உதவி செயலாளர் | இ.நி.சே | 11/111 | 1 | 1 |
| 10 | உதவி செயலாளர் (தொழிற்சங்கம்) | | | 1 | 1 |
| 11 | கணக்காளர் | இ.க.சே | 11/111 | 2 | 1 |
| 12 | உள்ளக கணக்காய்வாளர் | இ.க.சே | 1 | 1 | 1 |
| 13 | சட்ட அலுவலர் | திணைக்களம் | | 1 | 1 |
| | **மொத்தம்** | | | **18** | **14** |
| **மூன்றாம் நிலை** | | | | | |
| 14 | நிர்வாக அலுவலர் | பொ.டு.உ.சே(விஷேட) | | 1 | 1 |
| 15 | மொழிபெயர்ப்பாளர் | அரச மொழிபெயர்ப்பாளர் சேவை | | 2 | 1 |
| | **மொத்தம்** | | | **3** | **2** |
| **இரண்டாம் நிலை** | | | | | |
| 16 | பெருந்தோட்ட முகாமைத்துவம் மேற்பார்வை அலுவலர் | சார்ந்த சேவை | | 18 | 5 |
| 17 | அபிவிருத்தி அலுவலர் | சார்ந்த சேவை | | 21 | 16 |
| 18 | புள்ளிவிபர அலுவலர் | திணைக்களம் | | 1 | 1 |
| 19 | வரவு செலவுத்திட்ட உதவியாளர் | சார்ந்த சேவை | | 1 | 1 |
| 20 | நிதி உதவியாளர் | சார்ந்த சேவை | | 1 | 1 |
| 21 | கொள்வனவு உதவியாளர் | சார்ந்த சேவை | | 1 | 1 |
| 22 | சட்ட உதவியாளர் | சார்ந்த சேவை | | 3 | 0 |
| 23 | முகாமைத்துவ உதவியாளர் | பொ.டு.உ.சே | | 37 | 32 |
| 24 | வரவேற்பு அலுவலர் | திணைக்களம் | | 1 | 1 |
| 25 | கணிணி நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் | இ.த.தொ.சே | 111 | 1 | 0 |
| 26 | செயலாளரின் இணைப்பு செயலர் | (தற்காலிக) | | 1 | 1 |
| 27 | வீடியோ படப்பிடிப்பாளர் | தற்காலிக | | 1 | 0 |
| 28 | ஒளிப்படப்பிடிப்பாளர் | தற்காலிக | | 1 | 1 |
| | **மொத்தம்** | | | **88** | **60** |
| **ஆரம்ப நிலை** | | | | | |
| 29 | சாரதி | ஒ.சா.சே | | 24 | 22 |
| 30 | அலுவலக பணியாளர | அ.ப.சே | | 18 | 16 |
| 31 | படபிடிப்பு உதவியாளர் | தற்காலிக | | 01 | 01 |
| | **மொத்தம்** | | | **43** | **39** |
| | **கூட்டு மொத்தம்** | | | **152** | **115** |

## பணிமனையின் மாற்றம் - 2013

| | பதவி | சேவை | அனுமதிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை | இட மாற்றம் பெற்றோர் | ஓய்வு பெற்றோர் | விலகியோர் | இடமாற்றம் பெற்று சமூகமளித்த அலுவர்கள் |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | மேலதிக செயலாளர் | இ.நி.சே (விஷேட) | 02 | - | 01 | - | 01 |
| 02 | கணக்காளர் | இ.க.சே | 02 | 01 | 01 | - | 01 |
| 03 | சட்ட உதவியாளர் | சார்ந்த சேவை | 03 | 02 | - | - | - |
| 04 | அபிவிருத்தி அலுவலர் | சார்ந்த சேவை | 21 | 02 | - | - | 11 |
| 05 | பெருந்தோட்ட கண்காணிப்பு அலுவலர் | சார்ந்த சேவை | 18 | 02 | - | - | - |
| 06 | முகாமைத்தவ உதவியாளர் | | 37 | 06 | - | 01 | 03 |
| 07 | அலுவலக அலுவல் உதவியாளர் | | 18 | 01 | 01 | 01 | - |
| 08 | சாரதி | | 24 | - | 01 | - | - |

# 2013 ஆம் ஆண்டின் இலக்கினை அண்மித்தல்



| விபரம் | தேயிலை | | இறப்பர் | |
|---|---|---|---|---|
| | இலக்கு | முன்னேற்றம் | இலக்கு | முன்னேற்றம் |
| உற்பத்தி அளவு (கி.கி) | 334 | 340 | 159 | 130.4 |
| உற்பத்தித்திறன் (ஹெக்/கி.கி) | - | 1,720 | - | 1,247 |
| அந்நியச்செலாவணி ஈட்டல் (மி.ரூ) | 204 | 195 | 154 | 124 |
| பெறுமதி சேர் (%) | 42 | 42 | 74 | 74 |
| மீள் பயிர்ச்செய்கை (ஹெக்) | 4,200 | 1,660 | 3,548 | 2,483 |
| புதிய பயிர்ச்செய்கை (ஹெக்) | 700 | 264 | 3,500 | 3,371 |

## 2013 ஆண்டு வரவு செலவு திட்ட முன்மொழிவுகளை அமுல்படுத்துதல்.

| | வரவுசெலவு பிரேரணைகள் | அமுல்படுத்தல் முன்னேற்றம் |
|---|---|---|
| 1 | தேயிலை மீள்பயிர்ச்செய்கை மானியம் ஹெக்டேயருக்கு ரூபா 300,000 இருந்து 350,000 வரை அதிகரித்தல். | ❖ ஹெக்டேயர் - 1,215<br>❖ பயனாளிகள் - 20,770<br>❖ மானிய பெறுமதி – (ரூ.மி) - 304 |
| 2 | தேயிலை புதிய பயிர்ச்செய்கை மானியம் ஹெக்டேயருக்கு ரூ.150,000 இருந்து 250,000 வரை அதிகரித்தல். | ❖ ஹெக்டேயர் - 264<br>❖ பயனாளிகள் - 1,992<br>❖ மானிய பெறுமதி – (ரூ.மி) - 33 |
| 3 | சிறு தேயிலைத் தோட்டங்களில் கொழுந்து பறித்தலை இயந்திரமயமாக்கல். (100.மி.ரூ) | ❖ விளக்கமளிக்கும் நிகழ்ச்சித்திட்டங்கள் சிறு தோட்ட உரிமையாளர்களுக்காக – 10 நிகழ்ச்சித்திட்டங்கள் (பங்கு பற்றியோர் - 500)<br>• சிறு தோட்ட சங்க ஆளணி நிகழ்ச்சித்திட்டம் - 07 (பங்குபற்றியோர் - 550)<br>• தேயிலைத் தொழிற்சாலை உரிமையாளர்களுக்கு நிகழ்ச்சித்திட்டம் - 01 (பங்குபற்றியோர் - 25) விரிவாக்கல்<br>• அலுவலர்களுக்காக நிகழ்ச்சித்திட்டங்கள் - 03 (பங்குபற்றியோர் - 120)<br>❖ கொழுந்துபறித்தல், கத்தரித்தல் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் 21.3 மில்லியன் ரூபா செலவிட்டு கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுத்தல். |
| 4 | அம்பாறை மாவட்டத்தில் 10,000 ஹெக்டேயரில் புதிதாக இறப்பர் பயிர்ச்செய்கை மேற்கொள்ளுதல். | ❖ பொருத்தமான புவியியல் பிரதேசத்தினை அடையாளம் காணுதல்.<br>❖ மகாவலி, வன பாதுகாப்பு, மற்றும் அரச காணிகளை முறைமைப்படுத்தல்<br>❖ பயனாளிகளை அடையாளம் காணுதல் மற்றும் பயிற்சி<br>❖ பதியத்தலாவ நாற்றுப்பண்ணை ஆரம்பித்தல் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி<br>❖ 450 ஹெக்டேயரில் புதிதாக பயிரிடுதல்.<br>❖ இறப்பர் அபிவிருத்தி திணைக்களம், இறப்பர் ஆராய்ச்சி நிறுவனம் ஆகியவற்றின் உப அலுவலகங்களை நிறுவ நடவடிக்கை எடுத்தல். |
| 5 | பாரம்பரியமற்ற பிரதேசங்களில் இறப்பர் பயிரிடுதல். | ❖ மொனராகலை மாவட்டம்<br>• சி.தோ.மு.அ.நி – 5,087 ஹெக்டேயர் முழுமைப்படுத்துதல்.<br>• இ.அ.தி – 7,027 ஹெக்டேயர் முழுமைப்படுத்தல்<br>❖ அம்பாந்தோட்டை, வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களில் ஆராய்ச்சி மூலம் காணிகள் இனங்காணப்பட்டு 240 ஹெக்டேயர் பயிரிட ஆரம்பித்தல்.<br>❖ வட மாகாணதை கேந்திரமாகக் பயன்படுத்தி 17 ஆராய்ச்சி இடங்களை நடாத்திச் செல்லல்.<br>❖ வடமாகாண விவசாயத்துடன் தொடர்புடைய அலுவலர்கள் மற்றும் தெரிவு செய்யப்பட்ட படை அலுவலர்களுக்கு இறப்பர் பயிர் தொடர்பாக பயிற்சி வழங்குதல். |
| 6 | பிரதேச பெருந்தோட்டக் கம்பனிகளுக்கு நீண்டகால குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ள பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படாத காணிகளை விவசாய நடவடிக்கைகளுக்காக இளைஞர்களுக்கு பகிர்ந்தளித்தல். | ❖ பயிரிடப்படாத காணிகளாக அடையாளம் காணப்பட்ட 10,000 ஹெக்டேயர் தொடர்பான மாவட்ட மட்ட தகவல்களை உரிய அரசாங்க அதிபர்களுக்கு வழங்குதல்.<br>❖ காணி பகிர்ந்தளிப்பதற்காக முறைப்படியான முறைமையொன்றை தயாரித்தல்.<br>❖ மாவட்ட மட்டத்தில் காணி பயன்பாட்டு திட்டமிடல் நடவடிக்கைகள் மாவட்ட செயலகங்களால் தற்போது செயற்படுத்தப்படுகின்றது. |

## 2013 ஆண்டில் அமுல்படுத்தப்பட்ட முதன்மையான அபிவிருத்திச் செயற்பாடுகள்.

| | நிகழ்ச்சித்திட்டம் | முன்னேற்றம் |
|---|---|---|
| 1 | இறப்பர் புதிய பயிர் மானிய நிகழ்ச்சித்திட்டம். (SPEnDP மற்றும் வீட்டு தோட்ட நிகழ்ச்சித்திட்டம்) | ❖ ஹெக்டேயர் - 2,717<br>❖ பயனாளிகள் - 21,558<br>❖ மானிய பெறுமதி – 168 மி.ரு |
| 2 | இறப்பர் மீள்நடுகை மானிய நிகழ்ச்சித்திட்டம். | ❖ ஹெக்டேயர் - 2,483<br>❖ பயனாளிகள் - 15,125<br>❖ மானிய பெறுமதி – 269 மி.ரு |
| 3 | புவியியல் தகவல் கட்டமைப்பு (GIS) பயன்படுத்தப்பட்டு தேயிலை றபர் காணிகளை வரைபடமாக்கல். | முன்னோடி கருத்திட்டமாக காலி மாவட்டத்தின் வரைபடமாக்கல் நடவடிக்கைகள் நூற்றுக்கு 75 சதவீதம் அளவில் முடிவடைந்திருத்தல். |
| 4 | பிரதேச பெருந்தோட்ட கம்பனிகளுக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள காணிகளின் கடஸ்ரல் நில அளவை மீள ஆரம்பித்தல். | 3 பெருந்தோட்ட கம்பனிகளின் 34 தோட்டங்களின் வரைபடங்கள் நிலஅளவையாளர் நாயகத்தின் ஊடாக முழுமைப்படுத்தப்படல். |
| 5 | தேசிய பெருந்தோட்ட விருது வழங்கள். | இல 10 இன் கீழ் அனைத்து தரப்பினருக்கும் பிரதிநிதித்துவம் கூடியவாறு 150 விருதுகளுக்காக தகுதியானவர்களை தெரிவு செய்தல். |
| 6 | தேயிலை உற்பத்தி செய்யும் நாடுகளின் அமைச்சர்கள் மாநாடு இலங்கையில் நடாத்துதல் | சர்வதேச தேயிலை உற்பத்தியாளர்களின் அமைப்பை நிறுவதற்காக 7 நாடுகள் ஒப்புதல் உடன்படிக்கையில் கையெழுத்திடுதல் |
| 7 | இயற்கை இறப்பர் உற்பத்தி செய்யும் நாடுகள் சங்கத்தின் வருடாந்த அமர்வு இலங்கையில் நடாத்துதல். | வருடாந்த அமர்வு மிகவும் வெற்றிகரமாக நடாத்தியமை, அதன் தலைமைத்துவத்துக்கு இலங்கை நியமிக்கப்பட்டமை. |
| 8 | பச்சை தேயிலை கொழுந்தின் தரத்தை அதிகரித்தல். | உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் பச்சை தேயிலை கொழுந்தின் தரத்தினை நூற்றுக்கு 33 சதவீதம் இலிருந்து நூற்றுக்கு 60 சதவீதமாக உயர்த்தும் செயற்திட்டம் அமுல்படுத்தல். |
| 9 | தேயிலை தொழிற்சாலையை நவீனப்படுத்தல். | 1 மில்லியன் உச்ச எல்லைக்குட்பட்டு 39 தொழிற்சாலைகளுக்காக 20 மில்லியன் ரூபா வழங்கள். |
| 10 | தேயிலை மேம்படுத்தல் மற்றும் பிரச்சார நிதியத்தின் கீழ் "சிலோன் டீ" பெயரை உள்நாட்டு மற்றும் சர்வதேச ரீதியாக பிரபலப்படுத்துதல். | ❖ இலங்கை கிரிக்கெட் அணிக்கு ஆண்டொன்றுக்கு 205 மில்லியன் ரூபா என்றவாறு 3 ஆண்டுகளுக்கு அனுசரணை நல்குதல்.<br>❖ உள்நாட்டு தேயிலை பிரச்சாரம் மற்றும் சுற்றுலா ஈர்ப்புக்காக கொழும்பு குதிரைப்பந்தய திடலில் தேயிலை விற்பனை நிலையத்தை ஆரம்பிக்க நடவடிக்கையெடுத்தல்.<br>❖ உலக தேயிலை பிரச்சாரத்துக்காக 25 நாடுகள் இனங்காணப்பட்டு நிகழ்ச்சித்திட்ட திட்டமிடலின் கீழ் சேவை வழங்குனர்களை தெரிவு செய்வதற்காக விலைமனுக்கோரல் செயற்பாடு மேற்கொள்ளப்பட்டமை. |

# வாழ்வெழுச்சி தேசிய அபிவிருத்திசெயற்றிட்டம் - 2013

| | செயற்றிட்டம் | முன்னேற்றம் |
|---|---|---|
| 1 | தேயிலை புதிய பயிர்ச்செய்கையும் மீள் பயிர்ச்செய்கைக்கான கன்றுகளை வழங்குதலும். | கன்று - 1,081,324<br>மி.ரூ. 16.2 |
| 2 | தேயிலை பயிர்ச்செய்கையில் ஊடுபயிராக மிளகு பயிரிடல். | கன்று - 22,975<br>மி.ரூ. 0.41 |
| 3 | வணிக ரீதியான நாற்றுமேடைகளை உருவாக்குதல். | நாற்று - 50<br>மி.ரூ. 0.48 |
| 4 | சிறு காணிகளில் தரிசினை நீக்குதல் முகமாக ஒட்டு இறப்பர் கன்றுகளை வழங்குதல். | கன்று - 80,713<br>மி.ரூ. 4.84 |
| 5 | இறப்பர் பயிர் வீட்டுத்தோட்ட செயற்றிட்டம். | கன்று - 205,945<br>மி.ரூ 17.35 |
| 6 | இறப்பர் பயிர் ஊடுபயிர் செயற்றிட்டம். | ❖ வாழை<br>கன்று 21,512<br>மி.ரூ 0.83<br>❖ அன்னாசி<br>கன்று 65,887<br>மி.ரூ 0.9<br>❖ கொடித்தோடை<br>கன்று -1,271<br>ரூ.14,700 |
| 7 | புதிய தொழிநுட்பத்தையுடைய பால் கத்திகளை வழங்குதல். | பால் கத்தி - 2,799<br>மி.ரூ. 0.8 |
| 8 | இறப்பர் பயிர் நாற்றுமேடை அபிவிருத்தி. | நாற்று - 07<br>மி.ரூ. 2.82 |
| 9 | இறப்பர் பயிர் சமூக மத்தியநிலையத்தை ஏற்படுத்தல். | மத்திய நிலையம் - 02<br>மி.ரூ. 2.8 |













## 2013 ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ஏனைய நிகழ்ச்சித்திட்டங்கள்

- அரசினால் இறப்பர் நாற்றுமேடைகளின் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி மற்றும் கன்று உற்பத்தியை அதிகரிப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.





- தரத்தில் உயர்ந்த தேயிலைக் கன்றுகளை அவ்வவ் மாவட்டங்களின் ஊடாக பெற்றுக்கொள்வதற்காக மாவட்ட மட்டத்தில் நாற்றுமேடை அபிவிருத்தியும் புதிய நாற்றுமேடைகளை மாவட்ட மட்டத்தில் உருவாக்குவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

- சிறு தேயிலை பயிர்ச்செய்கையாளர்களின் கருத்துக்கள் பிரேரணைகளை கருத்திட் கொண்டு நாட்டின் 26 இடங்களில் நடாத்தப்பட்ட மாற்று ஆய்வுகளில் பெற்றுக்கொள்ளப்பட்ட பெறுபேறுகளின் படி உற்பத்திறனை அதிகரிப்பதற்காக புதிய உர பரிந்துரைகளை அறிமுகப்படுத்தல்.

- 2013 ஆண்டு பெப்ரவரி 04 தொடக்கம் 10 வரை அம்பாறை ஹாடி தொழிநுட்ப நிறுவனத்தில் நடாத்தப்பட்ட "தேசத்திற்கு மகுடம்" தேசிய அபிவிருத்தி கண்காட்சி நிமித்தம் அமைச்சின் கீழ் இயங்கும் சகல நிறுவனங்களினதும் பங்கேற்புடன் கண்காட்சி கூடத்தை உருவாக்குதல். இங்கு சிறந்த கண்காட்சி கூடத்தை தேர்வு செய்கையில் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு முன்வைத்த கண்காட்சி கூடத்திற்கு 10 வது இடம் கிடைத்தமை விஷேட விடயமாகும்.









- கௌரவ பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரது தலைமையில் பொன்னான பங்குதாரர் சந்திப்பில் மாதாந்தம் ஒரு முறையாவது நடாத்தி பிரதேச பெருந்தோட்டக் கம்பனிகளின் பிரச்சனைகளுக்கு தீர்வை வழங்குவது, தோட்ட பொருளாதாரம் தொடர்பாக இலக்காகக் கொண்டு அவர்களை தொழிற்படுத்துவதற்கு நடவடிக்கைளை மேற்கொள்ளல்.

❖ தேயிலை, இறப்பர் துறைகளில் சகல ஆர்வலர்களுடனும் அடிக்கடி கலந்தாலோசிப்பதன் மூலம் தொடர்ச்சியான இலக்கை மேற்கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல், அவர்களது பங்களிப்பை அதிகரித்துக் கொள்வதற்கு செயற்படுதல் அத்துடன் அவர்கள் முகங்கொடுக்கும் நடைமுறை சிக்கல்களை கலந்தாலோசனை செய்து உடனடி தீர்வினை பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.







❖ தேயிலை, இறப்பர் பயிர்ச்செய்கையை மேற்கொள்ளும் சகல மாவட்டங்களையும் வெவ்வேறாக தேயிலை, இறப்பர் விவசாயிகளுக்காக மக்கள் சந்திப்பை ஏற்படுத்தி அவர்கள் முகங்கொடுக்கும் நடைமுறை சிக்கல்களை கலந்தாலோசனை செய்து உடனடி தீர்வினை பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தலும், அம்மாதிரியான முன் நடாத்தப்பட்ட கலந்தாலோசனைகளின் முன்னேற்றத்தை பின்னாய்வு செய்தல்.

❖ தேயிலை மற்றும் இறப்பர் துறைகளை இலக்காக்கொண்ட அபிவிருத்தி விடயங்களை வினைத்திறனுடன் மேற்கொள்வதற்காக அமைச்சின் கீழ் இயங்கும் நிறுவனங்களின் சட்டத்தை நிகழ்கால, எதிர்கால தேவைகளுக்கேற்ப திருத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை தொடர்ச்சியாக மேற்கொள்ளல்.

❖ தேயிலை மற்றும் இறப்பர் துறையினருக்கு ஏற்புடைய விதிகளை காலத்தேவைக்கேற்றதன் பிரகாரம் திருத்தஞ் செய்தல்.

❖ ஏனைய அமைச்சு, திணைக்களம் மற்றும் நிறுவனங்களுடன் தொடர்பு பட்டு பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சின் கீழ் இயங்கும் நிறுவனங்களின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக தேவையான தலையீட்டுடன் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படும்.

❖ சர்வதேச புதிய தேயிலை சந்தையை மையப்படுத்தி விஷேட நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கௌரவ அமைச்சரது முதன்மையான பிரதிநிதித்துவ குழு ஆஜன்டீனா, சிலி மற்றும் பிரேசில் போன்ற இலத்தின் அமெரிக்கா நாடுகளில் சுற்றுலாவை மேற்கொண்டு தேயிலை பிரசார நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.







- கௌரவ பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரது தலைமைத்துவத்தில் துறைசார் சுற்றுலா, மேற்கொண்டு, வெளிக்கள அலுவலர்கள், உத்தியோகத்தர்கள், பயிர்ச்செய்கையாளர்களுடனும் கலந்தாலோசனை நடாத்துதல், கருத்துக்கள் மற்றும் பிரேரணைகள் பெற்றுக்கொள்ளல் மற்றும் அவற்றை அமுலாக்குதல்.



- தேயிலை, இறப்பர் ஆராய்ச்சியாளர்களால் மேற்கொள்ளப்பட்ட தரத்தில் சிறந்த உயர் விஷேட வகை பற்றிய மற்றும் மண் மற்றும் பயிரிடல் தொடர்பான ஏனைய ஆய்வுகளை தொடர்ச்சியாக மேற்கொள்ளல்.






- வாழ்வெழுச்சி தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்துகையில், கிராமிய மட்டத்தில் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பு படுத்தலை நோக்காக் கொண்டு, இணைத்துக் கொள்ளப்பட்ட 16,000 புதிய பட்டதாரிகளுக்கான பயிற்சி செயற்றிட்டங்களை அமுலாக்குகையில் "பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சின் பங்களிப்பு மற்றும் எதிர்வரும் திட்டம்" என்ற தலைப்பின் கீழ் கலந்துரையாடல் தொழிற்பாட்டில் அப்பட்டதாரிகளை இலகுவாக அறிவுருத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.










- சிரேஷ்ட அமைச்ச செயலகம் ஊடாக மேற்கொள்ளப்பட்ட இலங்கை மனித வள மற்றும் சேவையின் கொள்கை (NHREP) தயாரிப்பதற்கு உரிய 130 மில்லியன் ரூபாய்களையுடைய பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சின் செயற்பாட்டு திட்டமிடலை தயரா் செய்தல்.

# நிதி ரீதியான முன்னேற்ற மீளாய்வு

மில்லியன் ரூபாய்

| நிறுவனம் | 2013 ஆண்டுக்கான மீள்திருத்த ஒதுக்கீடு | | 2013 டிசம்பர் 31 வரை | | செயலாற்றுகை % | |
|---|---|---|---|---|---|---|
| | மூலதனம் | மீண்டெழும் | மூலதன செலவினம் | மீண்டெழும் செலவினம் | மூலதனம் | மீண்டெழும் |
| அமைச்சு | 25.398 | 141.700 | 17.819 | 132.188 | 70 | 93 |
| இலங்கைத் தேயிலைச் சபை | 45.000 | 125.000 | 37.910 | 120.000 | 84 | 96 |
| தேயிலை ஆராய்ச்சி நிறுவனம் | 88.000 | 262.000 | 87.296 | 252.113 | 99 | 96 |
| சிறு தேயிலை தோட்ட அபிவிருத்தி அதிகாரசபை | 300.000 | 235.000 | 294.800 | 225.336 | 98 | 96 |
| இறப்பர் அபிவிருத்தித் திணைக்களம் | 96.000 | 753.850 | 60.052 | 741.054 | 63 | 98 |
| இறப்பர் ஆராய்ச்சி நிறுவனம் | 60.000 | 210.000 | 53.400 | 195.750 | 90 | 93 |
| துருசவிய நிதியம் | 6.000 | 10.200 | 5.940 | 10.090 | 99 | 99 |
| தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனம் | 25.000 | 22.000 | 23.100 | 18.744 | 92 | 85 |
| சிறு பெருந்தோட்ட முயற்சியாண்மை அபிவிருத்தி செற்றிட்டம் | 449.000 | - | 448.428 | - | 100 | - |
| கூட்டுத்தொகை | **1,094.398** | **1,759.750** | **1,028.745** | **1,695.275** | **94** | **96** |

# துறைசார் மீளாய்வு

## தேயிலைத் துறை

### நோக்கு

***நிலையான அபிவிருத்திக்காக சிறு தேயிலைத் தோட்டத் துறை மற்றும் நிறுவன துறையை பலப்படுத்துவதன் ஊடாக தேயிலை கைத்தொழிலின் எதிர்காலத்தை பேணிக்காத்தல் மற்றும் சர்வதேச குடிபாண சந்தையில் பிரதான பங்காளராக இலங்கையின் உற்பத்தியாகும் தேயிலையை மேம்படுத்துதல்.***



1867 ஆண்டில் ஜேம்ஸ் டெயிலர் (Jemes Taylor) அவர்களால் இலங்கைக்கு தேயிலைப்பயிர் முதற் தடவையாக அறிமுகப்படுத்தப்பட்டது. இலங்கையின் தேயிலைப் பயிர் உயர்நில பிரதேசம், மத்திய பிரதேசம், தாழ்நில பிரதேசம் என ஈரவலய 14 மாவட்டங்களில் 123 பிரதேச செயலக பிரிவுகள் உள்ளடங்கியவாறு பரவலடைந்துள்ளது. நிலைபேறான அபிவிருத்திக்காக சிறிய தேயிலைத்தோட்ட துறை மற்றும் நிறுவன துறையை பலப்படுத்தல் ஊடாக தேயிலை கைத்தொழிலின் எதிர்காலத்தை பேணி காத்தல் மற்றும் சர்வதேச குடிபாண சந்தையின் பிரதான பங்காளராக இலங்கையின் உற்பத்தியாகும், தேயிலையை மேம்படுத்தலே தேயிலை கைத்தொழிலுக்கான தொலைநோக்காகும்.

தற்போது 204,024[1] ஹெக்டேயர் நிலப்பரப்பில் தேயிலைப்பயிர் பரவலடைந்துள்ளது. அதில் 120,955 ஹெக்டேயர் (நூற்றுக்கு59சதவீதத்துக்கான) பங்களிப்பு சிறிய தேயிலைத் தோட்டத்துறையால் வழங்கப்படுகிறது. இதில் 73,756 ஹெக்டேயர் (நூற்றுக்கு 36 சதவீத) பயிர்நிலப்பரப்பு 20 பிரதேச பெருந்தோட்டக் கம்பனிகளுக்குரியதாகும். 9,313 ஹெக்டேயர் (நூற்றுக்கு5சதவீத) அரச நிறுவனங்களால் முகாமைத்துவம் செய்யப்படுகின்றது.

[1] குறைநிரப்பி

மீளாய்வாண்டில் ஹெக்டேயரொன்றின் பொதுவான அறுவடை 1,727 கிலோகிராம் ஆகும். 2012 ஆண்டில் அது 1,688 கிலோகிராமாக இருந்தது. 2012 ஆண்டுடன் ஒப்பிடும்போது நூற்றுக்கு2.3 சதவீத அதிகரிப்பாகும். 2013ம் ஆண்டில் தேயிலை உற்பத்தி 340.2 மில்லியன் கிலோகிராமாகும். அதாவது 2012 ஆண்டுடன் ஒப்பிடும்போது 2013 ஆண்டின் தேயிலை உற்பத்தியில் நூற்றுக்கு 3.6 சதவீத அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. 2013 ஆண்டின் முதல் 6 மாதத்தில் தேயிலை பயிரிடப்படும் மாவட்டங்களில் நிலவிய நல்ல காலநிலை, சிறிய மற்றும் பெரிய தோட்டங்கள் ஆகிய இரு துறைகளிலும் சிறந்த விவசாய முறைமை பேணப்பட்டமை, உரியவாறு உரம் இடப்பட்டமை இந்த அதிகரிப்புக்கு காரணமாயிருந்தது.

மீளாய்வு ஆண்டின் உயர்விற்கமைய தேயிலை உற்பத்தியை கருத்திலெடுக்கும்போது தாழ்நில தேயிலை உற்பத்தி 208.4 மில்லியன் கிலோகிராம் ஆகும். அந்த அளவானது ஆண்டின் மொத்த தேயிலை உற்பத்தி நூற்றுக்கு 61.3 ஆகும். உயர்நில பிரதேச தேயிலை மத்தியநில பிரதேச தேயிலை உற்பத்தி முறையே 75.6 மில்லியன் கிலோ கிராமும் 56.2 மில்லியன் கிலோகிராம் என அறிக்கை செய்யப்பட்டுள்ளது. அந்த ஆண்டின் முழு தேயிலை உற்பத்தி முறையே நூற்றுக்கு 22.2 16.5 அமைகின்றது.



2012,2013 ஆண்டுகளில் உயர்வுக்கமைய தேயிலை உற்பத்தி கீழ் காட்டப்படுகின்றது.

**2012 , 2013** ஆண்டுகளில் உயர்வுக்கமைய தேயிலை உற்பத்தி கீழ் காட்டப்படுகின்றது.

| துறை | 2012 | 2013 |
|---|---|---|
| உயர்நில | 73.7 | 75.6 |
| மத்தியநில | 52.6 | 56.2 |
| தாழ்நில | 202.1 | 208.4 |
| **மொத்தம்** | **328.3** | **340.2** |




அதற்கமைய 2012 ஆண்டுடன் ஒப்பிடும்போது 2013 ஆம் ஆண்டில் உயர்நில பிரதேச தேயிலை உற்பத்தி 1.9 மில்லியன் கிலோகிராமால் அதிகரித்துள்ளது. மத்தியநில பிரதேச தேயிலை மற்றும் தாழ்நில பிரதேச தேயிலை உற்பத்தி முறையே 3.6 மில்லியன் கிலோகிராமினாலும், 6.3 மில்லியன் கிலோகிராமினாலும் அதிகரித்துள்ளது. இந்த அதிகரிப்புக்கு முக்கியமான காரணமானது இதற்கு முன்னரும் குறிப்பிட்டவாறே தேயிலை பயிரிடப்படும் பிரதேசங்களில் நிலவிய நல்ல காலநிலையேயாகும்.

மேலும் 2012, 2013 ஆண்டுகளின் மொத்த தேயிலை உற்பத்தி வழிமுறைகளுக்கமைய கீழ்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

**3.1 அட்டவணை**

**2012, 2013 ஆண்டுகளில் உற்பத்தி வழிமுறைக்கமைய தேயிலை உற்பத்தி**

| வகை | 2012 | | 2013 | |
|---|---|---|---|---|
| | கி.கி.மி | மொத்த உற்பத்தி % | கி.கி.மி | மொத்த உற்பத்தி % |
| பாரம்பரிய கறுப்புத் தேயிலை | 302.1 | 92 | 314.1 | 92 |
| சீ.டீ.சீ. தேயிலை | 23.3 | 7 | 22.4 | 7 |
| பச்சைத் தேயிலை | 3.0 | 1 | 3.7 | 1 |
| **மொத்த தொகை** | **328.4** | **100** | **340.2** | **100** |

மூலம்: இலங்கை தேயிலை சபை

2012 ஆண்டுடன் ஒப்பீடாக 2013 ஆண்டில் பாரம்பரிய கறுப்பு தேயிலை உற்பத்தி 12 மில்லியன் கிலோகிராமாக அதிகரித்துள்ளது. பசுமை தேயிலை உற்பத்தி 0.7 மில்லியன் கிலோகிராமால் உயர்ந்துள்ளது. இருப்பினும் C.T.C தேயிலை உற்பத்தி 0.9 ஆன போதும், 2013 ஆண்டில் அது 1220 ஹெக்டேயர் வரை உயர்வடைந்தது. இதில் 1,165 ஹெக்டேயர் சிறு தேயிலைத் தோட்ட அபிவிருத்தி அதிகாரசபையின் கீழ் 55 ஹெக்டேயர் சிறிய பெருந்தோட்ட முயற்சியாண்மை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பயிரிடப்பட்டது. மேலும் மீளாய்வு ஆண்டில் சிறு தேயிலைத் தோட்டத் துறையில் 263 ஹெக்டேயரில் புதிய தேயிலை பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. 2012 ஆண்டில் 234.2 மில்லியன் கிலோகிராம், அதாவது முழு தேயிலை உற்பத்தியில் நூற்றுக்கு71 சதவீத சிறு தேயிலைத்தோட்ட உரிமையாளர்களின் பங்களிப்பு மீளாய்வு ஆண்டில் 238.5 மில்லியன், அதாவது நூற்றுக்கு 70 சதவீதம் ஆகும்.

2012 ஆண்டில் சிறு தேயிலைத்தோட்ட உரிமையாளர்களால் உற்பத்தி செய்யப்பட்ட முழு தேயிலை 234.2 மில்லியன் கிலோகிராமாக இருந்த போதிலும், 2013 ஆண்டில் அது 238.5 மில்லியன் கிலோகிராம் வரை, அதாவது 4.3 மில்லியன் கிலோகிராம் (1.8) அதிகரிப்பாகவுள்ளது. மீளாய்வு ஆண்டிலும் சிறு தேயிலைத்தோட்ட அபிவிருத்தி அதிகாரசபை மூலம் சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்களுக்காக தொடர்ச்சியாக செயற்படுத்தப்பட்ட தேயிலை புதிய நடுகை மற்றும் மீள்நடுகை செயற்திட்டம், விரிவாக்கல் மற்றும் ஆலோசனை சேவை, பயிற்சி செயற்திட்டங்கள் காரணமாக 2013 ஆண்டிலும் இலங்கை தேயிலை உற்பத்தியில் சிறு தேயிலை தோட்டத்துறையானது தொடர்ந்தும் சிறப்பான இடத்தை பிடித்துள்ளது. தேசிய உர மானிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் தேயிலைப் பயிருக்காக தொடர்ச்சியாக வழங்கப்பட்ட உர மானியமும் சிறு தேயிலைத் தோட்ட துறையின் ஒப்பீட்டு ரீதியான அதிகரிப்புக்கு காரணமாயிருந்ததுடன், 2013 ஆகும் போது தேயிலை மீள் பயிரிடல் மற்றும் புதிய செய்கைக்காக முறையே ஹெக்டேயருக்கு ரூ.350.000, ரூ.250.000 என்ற வகையில் அரச தேயிலை பயிர் மானியம் உயர்த்தப்பட்டதுடன், அழிவடைந்த பயிருக்கான நடுகைக்கு தேயிலை கன்று ஒன்றுக்கு ரூ.25/= என்ற வகையில் மானியம் வழங்கப்பட்டமையும் தேயிலை பயிர்ச்செய்கையின் அபிவிருத்தியில் தாக்கம் செலுத்திய முக்கிய காரணிகளாகும்.

மீளாய்வு ஆண்டில் கொழும்பு தேயிலை ஏலத்தில் ஒரு கிலோகிராம் தேயிலையின் சாதாரண விற்பனை விலை ரூ.444.42 ஆக இருந்தது. 2012 ஆண்டில் கிலோகிராமொன்றின் விலை 391.64 ரூபாய் ஆகும். ஒப்பீட்டில் அது நூற்றுக்கு13.5 சதவீத அதிகரிப்பாகும். 2012 ஆண்டில் கப்பலேற்றும் வரையான செலவுக்காக (FOB) விலை கிலோகிராமொன்றுக்கு ரூ.563.94 ஆக இருந்ததுடன், 2013 ஆண்டில் அது கிலோகிராமொன்றுக்கு ரூ.623.91 வரை நூற்றுக்கு 10.6 சதவீத ஆக அதிகரித்துள்ளது.

2013 ஆண்டின் மீள் ஏற்றுமதியும் அடங்களாக ஏற்றுமதி செய்யப்பட்ட தேயிலையின் அளவு 319.67 மில்லியன் கிலோகிராமாகும். அதன் மூலம் ஈட்டப்பட்ட ஏற்றுமதி வருமானம் 199.440 மில்லியன் ரூபாவாகும்.

2012, 2013 ஆண்டுகளில் தேயிலை ஏற்றுமதி மற்றும் மீள் ஏற்றுமதி தொடர்பான விபரங்கள் கீழ்வரும் அட்டவணையில் காட்டப்படுகின்றது.

### 3.2 அட்டவணை

**2012, 2013 ஆண்டுகளில் தேயிலை ஏற்றுமதி மற்றும் மீள் ஏற்றுமதி தரவுகள்**

| ஆண்டு | ஏற்றுமதி | | | மீள் ஏற்றுமதி | | | மொத்த ஏற்றுமதி | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | அளவு கி.கி | FOB விலை (ரூ.கி/ கி) | வருமானம் ரூ.மி | அளவு கி.கி | FOB விலை (ரூ.கி/ கி) | வருமானம் ரூ.மி | அளவு கி.கி | FOB விலை (ரூ.கி/ கி) | வருமானம் ரூ.மி |
| 2012 | 306.0 | 552.26 | 169,015 | 13.9 | 820.84 | 11,415 | 319.9 | 563.94 | 180,430 |
| 2013 | 311.14 | 613.23 | 190,804 | 8.6 | 1,014.14 | 8,636 | 319.7 | 623.91 | 190,440 |

அதற்கமைய 2012 ஆண்டில் அறிக்கை செய்யப்பட்ட 319.9 மில்லியன் கிலோகிராமாகவிருந்த தேயிலை ஏற்றமதியின் மூலம் ஈட்டப்பட்ட 180,430 மில்லியன் ரூபாவுடன் ஒப்பிடும் போது 2013 ஆண்டில் முழு தேயிலை ஏற்றுமதி வருமானம் 190,440 மில்லியன் ரூபா வரை நூற்றுக்கு 5.5 சதவீத அதிகரித்த போதிலும், 2013 ஆண்டில் அறிக்கையான முழு தேயிலை ஏற்றுமதி 319.7 மில்லியன் கிலோகிராமாகும். இலங்கை தேயிலை ஏற்றுமதியின் மூன்றாவது பெரும் கொள்வனவாளரான சிரியாவில் நிலவிய சிவில் போர்நிலை காரணமாக மீளாய்வு ஆண்டில் சிரியாவுக்கு ஏற்றுமதி ஏற்றுமதி செய்யப்பட்ட தேயிலையின் அளவு குறைந்த போலும், துருக்கி மற்றும் குவைட் ஆகிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட அளவு அதிகரித்ததன் காரணமாக 2013 ஆண்டில் தேயிலை ஏற்றமதியில் பாரிய குறைவு ஏற்படவில்லை.

2013 ஆண்டில் முதன்மையான 10 கொள்வனவாளர்களால் 220.41 மில்லியன் கிலோகிராம் தேயிலை கொள்வனவு செய்யப்பட்டதுடன், அது மீளாய்வு ஆண்டின் முழு தேயிலை ஏற்றுமதியின் நூற்றுக்கு 70.8 சதவீதம் ஆகும். 2012, 2013 எட்டு ஆண்டுகளில் முதன்மையான கொள்வனவாளர்களுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட தேயிலையின் அளவு மற்றும் பெறுமானம் (மீள் ஏற்றுமதி தவிர) கீழ்வரும் அட்டவணையில் காட்டப்படுகிறது.

### 3.3 அட்டவணை

**2012, 2013 ஆண்டுகளில் முதன்மை கொள்வனவாளர்களுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட தேயிலையின் அளவு மற்றும் அதன் பெறுமானம்.**

| நாடு | 2012 | | 2013 | |
|---|---|---|---|---|
| | ஏற்றுமதி அளவு (கி.கி. மி) | கிலோகிராமுக்கு சுஏவ விலை (ரூ.மி) | ஏற்றுமதி அளவு (கி.கி. மி) | கிலோகிராமுக்கு கஏவ விலை (ரூ.மி) |
| ரஷ்யா | 47.25 | 568.50 | 45.68 | 660.45 |
| ஈரான் | 38.13 | 586.47 | 38.42 | 635.11 |
| துருக்கி | 23.13 | 495.41 | 32.20 | 564.07 |
| ஈராக் | 23.48 | 452.93 | 22.27 | 500.61 |
| சிரியா | 24.72 | 535.57 | 21.06 | 574.68 |
| ஐக்கிய அரபு ராஜ்ஜியம் | 11.58 | 535.36 | 17.53 | 578.76 |
| குவைட் | 7.31 | 394.97 | 16.02 | 401.68 |
| அசர்பைஜான் | 10.59 | 538.14 | 10.78 | 595.98 |
| யப்பான் | 9.54 | 638.83 | 8.82 | 683.12 |
| ஜோர்டன் | 9.40 | 479.28 | 7.63 | 598.74 |
| மொத்தம் | **205.13** | **-** | **220.41** | **-** |

2012 ஆண்டைப் போன்றே 2013 ஆண்டிலும் இலங்கையின் தேயிலை ஏற்றுமதியின் முதன்மை கொள்வனவாளர் ரஷ்யாவாகும். மீளாய்வு ஆண்டில் முழுத் தேயிலை ஏற்றுமதியின் (மீள் ஏற்றுமதி தவிர) நூற்றுக்கு 14.68 சதவீதம் ஆகும். மீளாய்வு ஆண்டில் இலங்கையின் இரண்டாவது முதன்மை கொள்வனவாளரான ஈராக் கொள்வனவு செய்த தேயிலை 38.42 மில்லியன் கிலோகிராமாகும்.

## முழு தேயிலை கைத்தொழிலினதும் அபிவிருத்திக்காக மீளாய்வு ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட முக்கிய செயற்பாடுகள்




- ❖ 2013 வரவு செலவுத்திட்ட உரையின் முன்மொழிவுக்கு அமைய தேயிலை மீள்நடுகைக்காக அதுவரைகாலமும் வழங்கப்பட்ட ரூ.300,000 மானியம் ரூ.350,000 வரையிலும் புதிய மானியம் 150,000 இலிருந்து ரூ.250,000 வரையும் அதிகரிக்கப்பட்டு அந்த பயன் சிறு தேயிலை தோட்ட உரிமையாளர்களுக்கு வழங்கப்பட்டது.

- ❖ 2013 வரவு செலவுத் திட்ட உரையின் முன்மொழிவுக்கமைய சிறு தேயிலைத் தோட்டத் துறையின் கொழுந்து பறித்தலை இயந்திரமயமாக்குவதற்காக 100 மில்லியன் ரூபாவுடனான விளைதிறன் மிக்க செயற்திட்டம் தேயிலை ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் சிறு தேயிலை தோட்ட அபிவிருத்தி அதிகாரசபையுடன் ஒருங்கிணைந்து அமுல்படுத்துதல்.





- ❖ தேயிலை ஆராய்ச்சி நிறுவனம், சிறு தேயிலைத் தோட்ட அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் தேயிலை சக்தி நிதியம் போன்றவற்றின் பணிகளை தற்போதைய காலத்துக்கு ஏற்றவாறு தயாரித்தலை இலக்காக கொண்டு அந்த நிறுவனங்களின் சட்டங்களை திருத்தம் செய்து அமைச்சரவைக்கு சமரப்பித்தல்.

- ❖ நிராகரிக்கப்பட்ட தேயிலை, வடித்தெடுக்கப்பட்டு அவ்வாறு வடித்தெடுக்கப்பட்ட தேயிலையை ஏலத்துக்கு விடுவதற்கும், எஞ்சிய பயன்படுத்த முடியாத தேயிலையை அழிப்பதற்கும் உத்தரவு தயார்படுத்தல் மற்றும் அமைச்சரவை அங்கீகாரத்துக்காக சமர்ப்பித்தல்.



- ❖ 2013 ஜனவரி 21, 22 ஆகிய திகதிகளில் உலக தேயிலை உற்பத்தி செய்யும் நாடுகளின் அமைச்சர்களது மாநாடு கொழும்பில் வெற்றிகரமாக நடாத்தியமை.



- தேயிலை பிரச்சாரம் மற்றும் மேம்படுத்தல் நிதியத்தின் கீழ் தேயிலை பொதுநலவாய சபையின் வர்த்தக அமைப்பின் உபசரணையை பெற்றுக்கொண்டு இலங்கை தேசிய கிரிக்கற் அணியின் சர்வதேச போட்டிகளுக்கான அனுசரணையை வழங்குவதனூடாக 'சிலோன் டீ' க்கான பிரச்சார செயற்திட்டத்தை அமுல்படுத்துதல்.

CEYLON TEA
SYMBOL OF QUALITY

- இலங்கைத் தேயிலை சபையின் கீழ் உலக மற்றும் உள்நாட்டு தேயிலை பிரச்சார நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்தத் தேவையான அடிப்படை நடவடிக்கைகளை முடிவுறுத்துதல்.



- இலத்தீன் அமெரிக்க வலயத்தை இலக்காகக் கொண்டு புதிய சந்தையை தேடுவதற்காக விசேட பிரச்சார செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்ததல்




- சிறு தேயிலைத் தோட்ட அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் இலங்கை வங்கியுடன் ஒருங்கிணைந்து சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்களுக்கு நிதியாக ரூபா 05 லட்சம் வரை கடன் பெறக்கூடியவாறு விசேட கடன் திட்டம் அமுல்படுத்துவதற்காக புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டது.

- முடிவுத் தேயிலையை சேர்த்துவைக்கும் களஞ்சியங்களை பரிசீலிக்கும் விசேட செயற்திட்டம் அமுல்படுத்தப்பட்டு, குறைபாடுகளை சீர்செய்வதற்கும், உரிய நியமனங்களை பின்பற்றாத களஞ்சியங்கள் தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுத்தல்.



❖ தொழிற்சாலைக்கு கொண்டு செல்லப்படும் உடன் தேயிலை கொழுந்தின் தரத்தை உயர்த்துவதற்காக “B – Leat 60” எனும் பெயரில் புதிய செயற்திட்டத்தை ஆரம்பித்தல்.

❖ தொழிற்சாலைகளின் சிறந்த உற்பத்தி பாங்கினை மேம்படுத்துவதற்காக விசேட செயற்திட்டத்தை ஆரம்பித்தல்.



❖ அரைவாசி வேலைகள் முடிவடைந்து நீண்டகாலம் கடந்திருந்த யட்டிநுவர தேயிலை சக்தி தொழிற்சாலையின் நிர்மாண நடவடிக்கைகளை மீள ஆரம்பித்தல்.




❖ புதிய குளோனிங்கை மேம்படுத்துதல், உற்பத்தி செலவை குறைத்தல் போன்ற துறைகள் தொடர்பில் மேற்கொள்ளப்படும் ஆராய்ச்சிகளை தொடர்ச்சியாக மேற்கொள்ளுதல்.

❖ முதன்மையான பயிர்ச்செய்கை பிரதேசங்களுக்கு உகந்தவாறு தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்தினூடாக புதிய உர விதந்துரையை முன்வைத்தல்

❖ தேயிலை கொழுந்து உற்பத்தியாளர்கள், விவசாயிகளை அரச அலுவலர்கள் சந்தித்து துறையுடன் தொடர்புடைய பிரச்சனைகளை கலந்துரையாடி தீர்த்துவைத்தல். இதன்கீழ் பதுளை, யட்டிநுவர கம்பளை, நாவலப்பிட்டிய ஆகிய பகுதிகளில் மக்கள் சந்திப்பு நடைபெற்றது.

❖ பயிரச்செய்கையாளர்களுக்கு தொழில்நுட்ப அறிவை விரிவாக்குவதற்காக தெளிவூட்டல், பயிற்சியளித்தல் நடவடிக்கைகளை தொடர்ச்சியாக நடாத்துவதற்காக தேயிலை செய்கை சார்ந்த விரிவாக்கல் அலுவலர்களின் வெற்றிடங்கள் அனைத்தையும் நிரப்ப நடவடிக்கை எடுத்தல்.

# இறப்பர் துறை

## நோக்கு

*தரத்தில் உயர்ந்த விளைதிறன் மிகு பயிரை பரவலாக்குவதன் ஊடாக தேசிய உற்பத்தியை உயர்த்துவதற்கும், இறப்பர் தொழில் துறையில் ஈடுபட்டுள்ள மக்களின் பொருளாதார மற்றும் சமூக நிலையை மேம்படுத்தக் கூடிய சூழலை உருவாக்குதல்.*



1876 ஆண்டில் சேர் ஹென்றி விக்ஹம் (Sir Henry Wickham) அவர்கள் இந்நாட்டுக்கு அறிமுகப்படுத்தப்பட்ட இறப்பர் பயிரானது பெருமளவில் இலங்கையின் பாரம்பரிய இறப்பர் பயிரிடப்படும் பிரதேசங்களான கொழும்பு, கம்பா(ஹ), களுத்துறை, கண்டி, மாத்தளை, காலி, மாத்தறை, குருணாகலை, பதுளை, இரத்தினபுரி, கேகாலை ஆகிய மாவட்டங்களில் பரவலடைந்து காணப்படுகிறது. இதற்கு மேலதிகமாக பாரம்பரியமான பிரதேசங்களில் இறப்பர் செய்கையை மேலும் விரிவாக்குவதற்கான இடவாய்ப்புக்கள் வரையறுக்கப்பட்டதாக இருப்பதனால் அரச கொள்கை தீர்மானத்துக்கமைய பாரம்பரியமற்ற பிரதேசங்களான மொனராகலை, அம்பாந்தோட்டை, அம்பாறை ஆகிய மாவட்டங்களிலும் இறப்பர் பயிரிடல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், வட மாகாணத்தின் முல்லைத்தீவு, வவுனியா ஆகிய மாவட்டங்களிலும் இறப்பர் பயிரிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இலங்கை இறப்பர் துறையின் முறையான வளர்ச்சி கடந்த தசாப்த்தத்தில் அறிக்கை செய்யப்பட்டுள்ளது. பொருளாதார நலன்களுக்கு மேலதிகமாக காடு வளர்ப்பிற்கு முன்மாதிரியிருந்தமை காரணத்தினாலும், சுற்றாடல் நேயத்துடன் காலநிலை முறைமையிலும் சிறந்த மாற்றத்தை உருவாக்குவதற்கும் காரணமாயிருந்தமையால் இறப்பர் பயிர்ச்செய்கை தொடர்ந்தும் பிரபலப்படுத்தும் காலத்தின் தேவையும் நிலவுகின்றது.

இறப்பர் தொழிற்துறைக்குரிய நோக்கானது தரத்தில் உயர்ந்த மற்றும் விளைதிறனான பயிர்ச்செய்கையை பரவலாக்குவதனூடாக தேசிய உற்பத்தியை உயர்த்துவதற்க்கும், அன்னிய

செலாவணியை அதிகரிப்பதற்கும், இறப்பர் தொழிற்துறையில் நிலைமை மேம்படுத்தக்கூடிய சூழலை உருவாக்குவதாகும். பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சின் கீழ் இயங்கும் இறப்பர் அபிவிருத்தி, திணைக்களம், இறப்பர் ஆராய்ச்சி நிறுவனம், துருசவிய நிதியம் ஆகிய நிறுவங்கள் மூலம் மீளாய்வு ஆண்டில் அமுல்படுத்தபட்ட பல்வேறு செயற்திட்டங்கள் மூலம் தரமான மற்றும் போதுமானளவு விளைதிறன் மிக்க பயிராக தொடர்ந்தும் இறப்பர் செய்கையை அபிவிருத்தி செய்ய தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டது.

தற்போது 133,668[2] ஹெக்டேயர் நிலப்பரப்பில் இறப்பர் பயிர் பரவலடைந்திருப்பதுடன், அதில் 85,442 ஹெக்டேயர் (நூற்றுக்கு64) இறப்பர் தோட்ட துறையால் பங்களிப்பு செய்யப்படுகின்றது. இதில் 46,635 ஹெக்டேயர் (நூற்றுக்கு35) பயிர்நிலப்பரப்பு 20 பெருந்தோட்டக் கம்பனிகளுக்கு உரியதாகும். 1,591 ஹெக்டேயர் (நூற்றுக்கு1) அரச நிறுவனங்களின் கீழ் முகாமைத்துவம் செய்யப்படுகின்றது.

2012 ஆண்டில் அறிக்கை செய்யப்பட்ட 152,049 மெற்றிக் தொன்னுடன் ஒப்பிடும் போது மீளாய்வு ஆண்டில் இறப்பர் உற்பத்தி 130,421 மெற்றிக்தொன்னாக நூற்றுக்கு 16.5 சதவீத்தினால் வீழ்ச்சியடைந்தது. 2013 ஆண்டில் இறப்பரின் விலை குறைந்த மட்டத்தில் இருந்தமையும், ஆண்டின் நடுப்பகுதியில் பாரம்பரிய இறப்பர் பயிருள்ள பிரதேசங்களில் நிலவிய கடும் மழை காரணமாக பால் வெட்டப்படும் நாட்கள் குறைவடைந்தமையாலும் இறப்பர் உற்பத்தி தொடர்பில் பாதகமாக தாக்கம் செலுத்தியபோதிலும், இறப்பர் உற்பத்தி தொடர்பாக இருந்த மதிப்பீட்டு தவறு சீர்செய்யப்பட்டமை காரணமாக கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வு ஆண்டில் இறப்பர் உற்பத்தியில் இவ்வாறான குறைவை காட்டுகின்றது.

2012 ஆண்டிலும் மொத்த இறப்பர் உற்பத்தியில் சீட் இறப்பர் உற்பத்தி உயர் பெறுமானம் பெற்றிருந்ததுடன், ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட முழு சீட் இறப்பர் 62,800 (நூற்றுக்கு48) மெற்றிக் தொன்னாகும்.




[2] குறைநிரப்பி

2012, 2013 ஆண்டுகளில் உற்பத்தி செய்யப்பட்ட பல்வேறு வகையான இறப்பர் உற்பத்தியின் அளவுகள் பின்வருமாறு காட்டப்படுகின்றது.

## 2012, 2013 ஆண்டுகளில் இறப்பர் உற்பத்தியினை வகைப்படுத்தல்

| வகை | இறப்பர் உற்பத்தி (மெ.தொன்) | |
|---|---|---|
| | **2012** | **2013** |
| சீட் | 59,242 | 62,800 |
| சோல் கிரேப் | 1,902 | 2,379 |
| ஸ்கிரேப் கிரேப் | 1,280 | 2,440 |
| லேடெக்ஸ் கிரப் | 36,550 | 15,373 |
| டீ.எஸ்.ஆர். | 8,672 | 9,566 |
| பிரித்தெடுப்பு மற்றும் ஏனையவை | 44,403 | 37,863 |
| **மொத்தம்** | **152,049** | **130,421** |




அதற்கமைய 2012 ஆண்டுடன் ஒப்பீடாக 2013 ஆண்டில் முழு இறப்பர் உற்பத்திக்கு உயர் பங்களிப்பு வழங்கும் சீட் இறப்பர் உற்பத்தி 3,558 மெற்றிக்தொன் (நூற்றுக்கு6)ஆல் உயர்ந்துள்ளது.

தேயிலைத் துறையைப் போன்றே இறப்பர் துறையிலும் சிறுதோட்ட உரிமையாளர்களே கூடுதல் பங்களிப்பு வழங்குகின்றனர். மீளாய்வு ஆண்டில் சிறு இறப்பர் தோட்ட உரிமையாளர்களின் உற்பத்தி 99,421 மெற்றிக்தொன் (நூற்றுக்கு76) ஆக இருந்தது. தேசிய உர மானிய திட்டத்தின் கீழ் மீளாய்வு ஆண்டிலும் சிறு இறப்பர் தோட்ட துறை மற்றும் கூட்டுத்தாபனத்துறை ஆகிய இரு துறைகளுக்காகவும் அரச உர மானியம் கிடைத்தது.

அவ்வாறே, மீளாய்வு ஆண்டில் அரசினால் இறப்பர் மீள்நடுகை மற்றும் புதிய நடுகைக்காக முறையே ஹெக்டேயரொன்றுக்கு 175,000 ரூபாவும், 150,000 ரூபாவும் மானியம் வழங்குதல் இறப்பர் பயிரின் அபிவிருத்திக்கு தொடர்ந்தும் காரணமாக இருந்தது. இறப்பர் அபிவிருத்தித் திணைக்களம் ஊடாக இறப்பர மீள்நடுகை மற்றும் புதிய நடுகை மானிய திட்டம் தொடர்ச்சியாக செயற்படுத்தப்பட்டதுடன், உயர் மானியம் காரணமாக இறப்பர் செய்கை தொடர்பில் சிறு இறப்பர் தோட்ட உரிமையாளர்களின் அக்கறை மேலும் அதிகரித்தது.

2012 ஆண்டுடன் ஒப்பிடும்போது 2013 ஆண்டில் அனைத்து இறப்பர் வகைகளினதும் பொதுவான விலையில் குறைவு ஏற்பட்டது. 2012, 2013 ஆண்டுகளில் RSS வகையின் கீழ் கொழும்பு ஏலத்தில் அறிக்கையான சாதாரண விலை 3.4 அட்டவணையில் காட்டப்படுகின்றது.

**3.4 அட்டவணை**

**2012, 2013 ஆண்டுகளில் பல்வேறு இறப்பர் வகைகளின் சாதாரண ஏல விலைகள்**

*ரூ/கி.கிராம்*

| வகை | சாதாரண விலை | |
|---|---|---|
| | **2012** | **2013** |
| ஆர்.எஸ்.எஸ் 1 | 416.61 | 376.78 |
| ஆர்.எஸ்.எஸ் 2 | 409.56 | 369.00 |
| ஆர்.எஸ்.எஸ் 3 | 398.21 | 360.70 |
| ஆர்.எஸ்.எஸ் 4 | 386.27 | 337.30 |
| ஆர்.எஸ்.எஸ் 5 | 350.70 | 341.79 |

மீளாய்வு ஆண்டில் இறப்பர் அபிவிருத்தித் திணைக்களத்தின் இறப்பர் மீள்நடுகை மானிய திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட 268.76 மில்லியன் ரூபா மானியம் மூலமாக இறப்பர் மீள்நடுகை செய்யப்பட்ட முழு நிலப்பரப்பு 1,782.17 ஹெக்டேயராகும். மேலும் இறப்பர் புதிய நடுகை செயற்திட்டத்துக்காக வழங்கப்பட்ட மானியத்தின் முழு பெறுமதி 167.73 மில்லியன் ரூபாவாகும். பயிரிடப்பட்ட நிலப்பரப்பு 1,574.12 ஹெக்டேயராகும். மேலும் இறப்பர் அபிவிருத்தித் திணைக்களம், இறப்பர் ஆராய்ச்சி நிறுவனம், துருசவிய நிதியம், தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனம் போன்ற நிறுவனங்களுடாக 2013 ஆண்டிலும் செயற்படுத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் காரணமாக இறப்பர் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் உரம் இடுதல், மழை கவச பயன்பாடு, தரமான இறப்பர் உற்பத்தி, தொழிநுட்ப அறிவை பெறுவதில் தொடர்ந்தும் தாக்கம் செலுத்தியது.

2013 ஆண்டில் இறப்பர் ஏற்றுமதி மூலம் ஈட்டப்பட்ட முழு அன்னிய செலாவணி 123,984.5 மில்லியன் ரூபாவாகும். அது 2012 ஆண்டில் உழைக்கப்பட்ட வருமானமான 123,402 மில்லியன் ரூபாவாகும். அது 2012 ஆண்டில் உழைக்கப்பட்ட வருமானமான 123,402 மில்லியன் ரூபாவுடன் ஒப்பிடும் போது நூற்றுக்கு 0.5 அளவான அதிகரிப்பாகும். பல்வேறு வகையான இறப்பர் உற்பத்தி மூலம் 2012, 2013 ஆண்டுகளில் பெற்ற வருமானம் 3.5 அட்டவணையில் காட்டப்படுகின்றது.

## 3.5 அட்டவணை

### 2012, 2013 ஆண்டுகளில் பல்வேறு வகையான இறப்பர் ஏற்றுமதியின் பெறுமதி

*ரூ.மி*

| வகை | ஏற்றுமதி பெறுமதி | |
|---|---|---|
| | 2012 | 2013 |
| உடன் இறப்பர் | 15,726 | 9,194 |
| முடிவுப் பொருள் | 107,676 | 114,790 |
| **மொத்த தொகை** | **123,402** | **123,984** |

மேலும் 2013 ஆண்டில் பச்சை இறப்பர் ஏற்றுமதி 23,586 மெற்றிக் தொன்னாகும். அதே ஆண்டின் முழு இறப்பர் உற்பத்தியான 130,421 மெற்றிக தொன்னுடன் ஒப்பிடும்போது நூற்றுக்கு 18 ஆகும். ஆனால் 2012 ஆண்டில் பச்சை இறப்பர் ஏற்றுமதி செய்யப்பட்ட 37,377 மெற்றிக் தொன்னுடன் ஒப்பிடும் போது நூற்றுக்கு 37 அளவான குறைவு ஏற்பட்டுள்ளது. 2013 ஆண்டில் பச்சை இறப்பர் 107,259 மெற்றிக்தொன் உள்நாட்டில் பெறுமதி சேர்க்கப்படுவதற்கு பயன்படுத்தப்பட்டதே அதற்கு காரணமாகும். மீளாய்வு ஆண்டில் இறப்பர் முடிவுப் பொருள் ஏற்றுமதி மூலம் 114,790 மில்லியன் ரூபா உழைக்கப்பட்டதுடன், 2012 ஆண்டில் ஈட்டப்பட்ட 107,676 மில்லியன் ரூபாவுடன் ஒப்பிடும் போது அது நூற்றுக்கு7 அளவான அதிகரிப்பாகும்.

### முழு இறப்பர் தொழிற்துறையினதும் அபிவிருத்திக்காக மீளாய்வு ஆண்டில் நிறைவேற்றப்பட்ட முதன்மையான செயற்பாடுகள்

- ❖ வடக்கு மாகாணத்தில் இறப்பர் பயிரை விரிவாக்கம் செய்ய தேவையான நடவடிக் கைகள் குறித்த பிரதேசங்களின் மாவட்ட செயலர்களுடன் ஒருங்கிணைந்து மேற்கொள்ளப் பட்டது. இறப்பர் ஆராய்ச்சி நிறுவனத்தின் ஊடாக வடக்கில் மேற்கொள்ளப்படும் பரீட்சார்த்த பயிர் பராமரிப்பு செய்தல், புதிய ஆராய்ச்சி நடுகை தொடர்பாக இலங்கை இராணுவத்தின் ஒத்துழைப்புடன் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அதற்கமைய வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் முறையே மாதிரி பயிர்ச்செய்கை காணி துண்டுகள் 10,07,02 என ஆரம்பித்தல்.








❖ அம்பாறை மாவட்டத்தில் 10,000 ஹெக்டேயரில் இறப்பர் பயிரிடும் செயற் திட்டத்தின் கீழ் 450 ஏக்கர் இறப்பர் புதிய செய்கை ஆரம்பிக்க நடவடிக்கை எடுத்தல்.

❖ மொனராகலை மாவட்டத்தில் 5,000 ஹெக்டேயர் இறப்பர் செய்கை இலக்கை எட்டுதல்



❖ பாரம்பரியமற்ற பிரதேசங்களின் நாற்று கன்று தேவைகளை நிறைவு செய்வதற்காக பதியதலாவ புதிய நாற்று பண்ணை நிலம் பயன்படுத்தப்பட்டு நாற்று பண்ணைக்கு தேவையான கட்டிடம் மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதி அபிவிருத்திக்கான அடிப்படை நடவடிக்கைகள் மேற்கொள்ளல்



❖ இறப்பர் பயிரின் மழை கவச பயன்பாட்டை மேலும் பிரபலப்படுத்துவதற்க்காக சிறு காணி உரிமையாளர்களான விவசாயிகளுக்கும், பெருந்தோட்ட கம்பனிகளுக்கும் மானியம் வழங்கல் தொடர்ச்சியாக மேற்கொள்ளுதல், அது தொடர்பாக தெளிவு படுத்தலை தொடர்ந்தும் மேற்கொள்ளுதல்.

❖ இறப்பர் நாற்று பண்ணை மேற்பார்வை மற்றும் நடைமுறைப்படுத்துதல் தொடர்பான குழு நியமிக்கப்பட்டு நாற்று பண்ணைகளின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மேற்பார்வை செய்தல்

❖ இறப்பர் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ள தரையில் வளர்ந்துவரும் காலத்தில் ஊடு பயிர்ச்செய்கையை ஊக்குவித்தல்





❖ பால்வெட்டுவோரை பயிற்றுவிக்கும் செயற்திட்டத்தை வெளிக்களத்துக்கு சென்று தொடர்ச்சியாக மேற்கொள்ளுதல்

❖ சிறந்த விவசாய முறைமை மற்றும் உரம் இடுதல் சரியான முறைமை தொடர்பாக விவசாயிகளை தெளிவூட்டும் நிகழ்ச்சிகளை நடாத்துதல்.



❖ கௌரவ பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரின் தலைமையில் சிறு இறப்பர் தோட்ட உரிமையாளர்கள் கூட்ட ஏற்பாடு, இக் கலந்துரையாடலுக்காக சிறு இறப்பர் தோட்ட உரிமையாளர்களை அழைத்தல் துருசவிய நிதியத்தினூடாக மேற்கொள்ளப்பட்டதுடன், அத்துறையில் நிலவும் விவசாயிகளின் பிரச்சனைகள் தொடர்பாக கலந்துரையாடுதல் மற்றும் அப்பிரச்சனைகளை தீர்ப்பதற்கான கொள்கை ரீதியான தீர்மானமெடுத்தல் அமைச்சு மட்டத்தில் மேற்கொள்ளப்படுகின்றது.



❖ 2013-10-08 ஆம் திகதியிலிருந்து 2013-10-13 ஆம் திகதி வரை கொழும்பு கலதாரி ஹோட்டலில் 11 நாடுகளின் பிரதிநிதித்துவ பங்கேற்புடன் இயற்கை இறப்பர் உற்பத்தி செய்யும் நாடுகளின் வருடாந்த அமர்வு வெற்றிகரமாக நடாத்தப்பட்டது. எதிர்வரும் ஆண்டின் தலைமைத்துவத்துக்கு இலங்கை போட்டியின்றி தெரிவு செய்யப்பட்டது.

❖ துருசவிய நிதியத்தினூடாக இலங்கை வங்கியுடன் இணைந்து சிறு இறப்பர் தோட்ட உரிமையாளர்கள் 275 பேருக்கு 25.5 மில்லியன் ரூபா கடன் வழங்கப்பட்டது.





❖ பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் அமுல்படுத்தப்படும் 'வாழ்வெழுச்சி' தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அம்பாந்தோட்டை, மொனராகலை, அம்பாறை, வவுனியா, முல்லைத்தீவு ஆகிய மாட்டங்களில் வீட்டுத்தோட்ட செயற்திட்டமாக இறப்பர் பயிர் அறிமுகப்பட்டுத்தப்பட்டு 205,867 இறப்பர் நாற்றுக்கள் இலவசமாக வழங்க நடவடிக்கை எடுத்தல்.

## கட்டுப்பொல் (பாரம் எண்ணெய்) துறை (Palm)

***நோக்கு***

***உள்நாட்டு உணவு எண்ணை தேவையை தேவைப்பாட்டை பூர்த்தி செய்வதற்க்காக வர்த்தக பயிராக மேம்படுத்துவதனூடாக தேசிய பொருளாதாரத்துக்கு பங்களிப்பு வழங்குதல் மற்றும் அதன் மூலம் உணவு எண்ணை இறக்குமதிக்காக வருடாந்தம் செலவாகும் அன்னிய செலாவணியை மீதப்படுத்துதல்.***



உள்நாட்டு உணவு எண்ணை தேவையை பூர்த்தி செய்வதற்க்காக வர்த்தக பயிராக பாம் பயிர்ச்செய்கையை அபிவிருத்தி செய்வதனூடாக தேசிய பொருளாதாரத்துக்கு பங்களிப்பு நல்குதல் மற்றும் உணவு எண்ணைக்காக செலவாகும் அன்னிய செலாவணியை சேமிப்பதே பாம் பயிர்ச்செய்கையின் நோக்கமாகும். தற்போது 7,780 ஹெக்டேயர் நிலப்பரப்பில் பாம் பயிர்ச்செய்கை பரவலடைந்துள்ளது. அந்த பயிர்நிலங்களில் 7,761 ஹெக்ரேயர் 05 பிரதேச பெருந்தோட்டக் கம்பனிகளின் கீழும், 19 ஹெக்டேயர் பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் கீழும் முகாமைத்துவம் செய்யப்படுகிறது. 2012 ஆண்டின் இறுதியில் பெருந்தோட்டக் கம்பனிகளுக்குரிய தோட்டங்களில் பாம் பயிர் பயிர்செய்யப்பட்டுள்ள நிலப்பரப்பு 3.6 அட்டவணையில் காட்டப்படுகின்றது.

## 3.6 அட்டவணை

**பாம் பயிரின் தொடர்பான தரவுகள்**

*ஹெக்டேயர்*

| பெருந்தோட்டக் கம்பனிகளது பெயர் | முதிர்ச்சியடைந்த பயிரும் காணி அளவும் | முதிர்வடையாத பயிரும் காணி அளவும் | மொத்த காணி அளவு |
|---|---|---|---|
| அகலவத்தை | 947 | 354 | 1,301 |
| வட்டவலை | 1,910 | 1,161 | 3,071 |
| நமுனுகுல | 1,061 | 536 | 1,597 |
| எல்பிட்டிய | 782 | 427 | 1,209 |
| கொட்டகல | - | 583 | 538 |
| இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் (SLSPC) | 19 | - | 19 |
| **மொத்தம்** | **4,719** | **3,061** | **7,780** |

பெருந்தோட்டக் கம்பனிகள் பாம் பயிர்ச்செய்கை மேற்கொள்ளும்போது தேவையான விதைகளை தீர்வையற்ற நிவாரணதின் கீழ் இறக்குமதி செய்வதற்கு தேவையான விதந்துரைகளை வழங்குதல் மற்றும் பாம் பயிரிலிருந்து பெறக்கூடிய பயன்கள், அதனை பரவலாக்குவதன் முக்கியத்துவம் தொடர்பாக மேற்கொள்ளப்படும் ஆராய்ச்சி நடவடிக்கைகள் மற்றும் பிரச்சார நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல் போன்றவை இந்த அமைச்சினால் மேற்கொள்ளப்படுகின்றது. அதற்கமைய 2013 ஆண்டில் பெருந்தோட்டக் கம்பனிகளுக்கு பயிரிடத் தேவையான 51,500 விதைகள் தீர்வையற்ற சலுகையில் இறக்குமதி செய்ய விதந்துரைக்கப்பட்டது.

# வெளிநாட்டு கடன் மூலம் அமுலாக்கப்பட்ட அபிவிருத்தி கருத்திட்டங்கள்

**சிறு பெருந்தோட்டமுயற்சியாண்மை அபிவிருத்தி செயற்றிட்டம்**

IFAD
INTERNATIONAL FUND FOR AGRICULTURAL DEVELOPMENT

*சிறு பெருந்தோட்ட முயற்சியாண்மை விருத்தி செயற்திட்டத்திற்காக (SPEnDP) விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியம் (IFAD) மற்றும் இலங்கை அரசினால் நிதி வழங்கல் செய்யப்பட்டுள்ளது*

*இந்த செயற்திட்டமானது மத்திய பகுதியின் கண்டி, நுவரெலியா, கேகாலை மாவட்டங்கள் உள்ளடக்கி (ஆறு) பிரதேச செயலகப் பிரிவுகளில் வாழும் பின்தங்கிய சிறு காணி உரிமையாளர்களான தேயிலை தோட்டக்காரர்களினதும், மொனராகலை மாவட்டத்தின் இடைக் காலநிலை வலயத்துக்குரிய 08 பிரதேச செயலகப் பிரிவுகளில் வாழும் குறைந்த வருமான மட்டத்துடனான சிறிய அளவிலான விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதலை இலக்காக கொண்டு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.*

*அப்பிரதேசங்களில் 8,700 வீட்டு அலகுகளில் வாழும் 39,250 நபர்கள் இந்த செயற் திட்டத்தின் பயனாளிகளாவர். அவர்களை மத்திய பிரதேசங்களில் 250 ஹெக்டேயர் தேயிலை மற்றும் மொனராகலை மாவட்டத் தில் 5,000 ஹெக்டேயர் இறப்பர் பயிரிடுவதற்கு ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.*









## நிகழ்ச்சித்திட்டத்தின் குறிக்கோள்

- தமது சிறு பயிர்ச்செய்கையுடன் பிணைந்துள்ள பதப்படுத்தல் முயற்சியாண்மையுடைய நிலைபேறான வெளித்தரப்பு பயிர்ச்செய்கையாளர் முறையை அபிவிருத்தி செய்வதற்க்காக சிறுதோட்ட உரிமையாளர்களுக்கு சந்தர்ப்பத்தை வழங்குதல்.
- இலக்கு குழுக்கள் மற்றும் தனியார், அரச துறையினரிடையே விளைதிறன் மிகு கூட்டு முயற்சியை மேம்படுத்துதல், ஒருங்கிணைத்தல்

### 3.7 அட்டவணை

**செயற்றிட்ட நிதி விபரங்கள்**

மில்லியன் ரூபா

| நிதி தன்மை | நிகழ்ச்சித்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட மொத்த தொகை 2008 -2017 | 2013.12.30 திகதிக்கான தேறிய செலவினம் | 2013 ஆண்டுக்கான வருடாந்த வரவுசெலவு ஒதுக்கீடு | 2013.12.31 திகதிக்கான முன்னேற்றம் |
|---|---|---|---|---|
| இலங்கை அரச நிதி | 383.98 | 119.50 | 26.80 | 26.50 |
| விவசாய அபிவிருத்திக்காக சர்வதேச நிதியக் கடன் | 2,300.79 | 1,500.58 | 422.20 | 418.55 |
| நிதி நிறுவனங்களில் பங்களிப்பு | 73.06 | 61.10 | 41.25 | 40.41 |
| பயனாளிகளது பங்கேற்பு | 103.06 | 71.98 | 16.70 | 13.54 |
| **மொத்தம்** | **2,860.89** | **1,753.16** | **506.95** | **499.00** |

## 3.8 அட்டவணை

**செயற்திட்டத்தின் திரண்ட முன்னேற்றம்**

| | செயற்திட்டம் | முன்னேற்றம் |
|---|---|---|
| 1 | இறப்பர் புதிய நடுகை | மொனராகலை மாவட்டத்தில் 5,087 ஹெக்டேயர் பயிர்ச்செய்கை முழுமைப்படுத்தல். |
| 2 | தேயிலை மீள் நடுகை | கேகாலை, கண்டி, நுவரெலியா, மாவட்டங்களில் 157.5 ஹெக்டேயரில் தேயிலை நடுகை முழுமைப்படுத்தல். |
| 3 | அழிவடைந்த தேயிலை நடுகை | கேகாலை, கண்டி, நுவரெலியா மாவட்டங்களில் 440 ஹெக்டேயர் அழிவடைந்த இடங்களில் தேயிலை நாட்ட 5.5 மில்லியன் வழங்கள். |
| 4 | கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி | 84.8 கி.மீ பிரதேச வீதிகள் (மொனராகலை, மத்திய பகுதி) அபிவிருத்தி. |
| 5 | வருமான ஈட்டல் செயற்பாடுகள் | 2,017 கால்நடை வளர்ப்பு அலகுகள் ஆரம்பித்தல். |
| 6 | வருமான ஈட்டலுக்காக கிராமிய நிதி, கடன் வசதிகள் வழங்கல் | 273 மி.ரூ நிதி வசதி வழங்கல் 2,183 – பயனாளிகள். |

மொத்த ஒதுக்கீடு – மி.ரூ. 2,860.89
திரண்ட செலவு - மி.ரூ. 1,753.16

மொத்த பௌதீக முன்னேற்றம் - **69 %**
மொத்த நிதி முன்னேற்றம் - **61%**

## 2013.01.01 இலிருந்து 2013.12.31 வரை நிதி, பௌதீக முன்னேற்றம்

I. செயற்திட்டத்தின் வருடாந்த செலவு 499 மில்லியன் ரூபாவாகும். அது 2013 ஆண்டுக்காக நிகழ்ச்சித்திட்டத்துக்கு கிடைத்த 506.95 மில்லியன் ரூபா பாதீட்டு ஒதுக்கீட்டின் 98.4% ஆகும்.

II. மீளாய்வு ஆண்டின் இறப்பர் செய்கைகளில் புதிதாக சேர்க்கப்பட்ட 220 ஹெக்டேயர் மற்றும் அந்த நிலப்பரப்பில் பயிரிடுவதற்காக தரமுயர்ந்த 114, 131 இறப்பர் நாற்றுக்கள் செயற்திட்டத்தினால் வழங்கப்பட்டது. இதற்கு முன்னைய ஆண்டுகளில் மாவட்டத்தில் பயிரிடப்பட்ட இறப்பர் காணிகளில் உள்ள வெற்றிடங்களில் நடுகைக்காக 130, 692 இறப்பர் நாற்றுக்கள் வழங்கப்பட்டது. இதற்காக செலவிடப்பட்ட நிதி 32 மில்லியன் ரூபாவாகும்.





III. 2013 ஆண்டில் இறப்பர் பயிர் மானியமாக 90 மில்லியன் ரூபா மொனராகலை மாவட்டத்தின் 4,092 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டது. மேலும் 3.5 மில்லியன் ரூபா சுயதொழில் மற்றும் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்காக உதவி கொடுப்பனவாக பயனாளிகளுக்கு வழங்கப்பட்டது.

IV. இறப்பர் பயிருக்கிடையிலான ஊடுபயிராக சோளம் பயிரிடுவதற்காக உயர்தர சோள விதை 4,665 கிலோ 933 விவசாயிகளுக்கு பகிர்ந்தளித்தல் 2013 நவம்பர் மாத இறுதியில் மேற்கொள்ளப்பட்டது. இப்பயிரின் விளைச்சல் 2014 ஜனவரி, பெப்ரவரி மாதங்களில் கிடைக்கவுள்ளது. செயற்திட்டத்தினால் சோள விளைச்சல் கொள்வனவு செய்வதற்காக பிறிமா நிறுவனத்துடன் உடன்படிக்கை செய்யப்பட்டது.





V. சிறு ஏற்றுமதி பயிர் திணைக்களத்துடன் தொடர்புகொண்டு 320 ஹெக்டேயர் அளவான இறப்பர் மரங்களுக்கிடையில் ஊடுபயிராக கொக்கோ பயிர் நடப்பட்டது. அதற்காக 170,109 கொக்கோ நாற்றுக்கள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது. இந்த செயற்திட்டத்துக்காக 3 மில்லியன் ரூபா செலவிடப்பட்டது.

VI. இறப்பர் பயிரின் ஊடுபயிராக கொடித்தோடை பயிரிடுவதற்காக 15,900 நாற்றுக்களும், 615 கிலோ கம்பியும் வழங்கப்பட்டது.





VII. மத்தியநில பிரதேசத்தில் உப செயற்திட்டத்தின் பிரதேச பயனாளிகள் 750 பேருக்கு 40 ஹெக்டேயரில் தேயிலை மீள் நடுகைக்காகவும், 10 ஹெக்டேயரில் அழிந்த மரங்களுக்கு பதிலாக நடுவதற்காகவும் 250 விவசாயிகளுக்கு 17.7 மில்லியன் ரூபா செலவிடப்பட்டது.







VIII. 61 ஹெக்டேயர் பரப்பளவில் ஊடுபயிராக மிளகு நடுவதற்காக 12,538 மிளகு நாற்றுக்கள் 610 பயனாளிகளுக்கு வழங்குவதற்க்கும், அதற்குரிய ஆலோசனை சேவைகள் வழங்குவதற்காகவும் 0.3 மில்லியன் ரூபா செயற்திட்டம் அமுல் படுத்தப்பட்டது.

IX. குறைந்த வருமானமுடைய 94 குடும்பங்களுக்கு 3.9 மில்லியன் ரூபா பெறுமதியான சீராக்கல் கொடுப்பனவு வழங்குவதனூடாக சுயதொழில் மூலமாக வருமான அதிகரிப்பு நடவடிக்கை திட்டமிடப்பட்டது.





X. மரக்கறி பயிர்செய்யும் 75 குடும்பங்களுக்கு தேவையான நீரை வழங்குவதற்காக உடபலாத பிரதேச செயலக பிரிவில் தொரகல குளம் மற்றும் வாய்க்கால்கள் 4.1 மில்லியன் ரூபா செலவில் புனரமைப்பு செய்யப்பட்டது.





XI. 8 மில்லியன் ரூபா செலவில் தொழுவ மற்றும் உடபலாத்த பகுதிகளில் 510 பயனாளிகளுக்குரிய 200 ஹெக்டேயர் காணி, கேகாலை மாவட்ட செயலகப் பிரிவுக்குரிய 560 பயனாளிகளின் 180 ஹெக்டேயருக்கான உறுதி பெறுவதற்கு உதவுவதற்காக காணி நில அளவை செய்வதற்கு திட்டமிடப்பட்டது.

XII. வாசனைதிரவியம் உற்பத்தி செய்யும் 120 பயனாளிகளின் பயன்பாட்டுக்காக 1.2 மில்லியன் ரூபா செலவில் அரணாயக்க பிரதேச செயலக பிரிவில் தெய்யன்னவெல பதப்படுத்தல் நிலையம் ஆரம்பிக்கப்பட்டது.

XIII. பால் உற்பத்தி செய்யும் 20 பயனாளிகளது குடும்ப நன்மைக்காக 0.5 மில்லியன் ரூபாய் செலவில் சரிப்படுத்தல் நன்கொடை வழங்கி யோகட் அடைக்கும் இயந்திரமொன்றை பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்து.

XIV. இரண்டு மில்லியன் ரூபா செலவில் சிறு அளவிலான 150 முயற்சியாளர்களுக்கு வியாபார அபிவிருத்தி பயிற்சிகள் நடாத்தப்பட்டன.

XV. 1.3 மில்லியன் ரூபா செலவில் சேவை வழங்கல் நிறுவனமொன்றை பங்கேற்கச் செய்து 80 தேன் உற்பத்தியாளர்கள் மற்றும் 480 கித்துள்சார் உற்பத்திகளுக்காக அவர்களது அந்த வியாபார மேம்பாட்டுக்கு தேவையான வழிகாட்டல் மேற்கொள்ளப்பட்டது.






XVI. 0.95 மில்லியன் ரூபா செலவில் 19 மாட்டு தொழுவங்கள் அமைப்பதற்காக பயனாளிகளுக்கு நிதியுதவி வழங்கப்பட்டது.



XVII. மெதரட்ட, மற்றும் மொனராகலையில் 1,225 பயனாளிகளுக்கு வருமானம் ஈட்டும் நடவடிக்கைகள் மற்றும் சிறு அளவிலான வியாபாரம், விவசாய அபிவிருத்திக்காக 166 மில்லியன் ரூபா வர்த்தக வங்கிகள் ஊடாக 9% குறைந்த வட்டி வீதத்தில் வழங்கப்பட்டது. அதில் மெதரட்ட தேயிலை தொழிற்சாலைகள் 6 நவீன மயப்படுத்தப்படுத்துவதற்காக 35 மில்லியன் ரூபா வழங்கப்பட்டது.

# பிரிவு ரீதியான செயற்பாடுகள்

## நிர்வாகப் பிரிவு

*அமைச்சின் அனைத்து நிறுவன மற்றும் உள்ளக நிர்வாக நடவடிக்கைகள் நிர்வாக பிரிவினால் மேற்கொள்ளப்படுகிறது. பாராளுமன்ற கேள்விகள் தொடர்பில் செயற்படுதல், அமைச்சரவை பத்திரம் அமைச்சரவை அலுவலகத்துக்கு சமர்ப்பித்தல் தொடர்பிலான அனைத்து ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுதல், ஆளணி பயிற்சி, ஆளணியினரை ஆட்சேர்ப்பு செய்வதற்கான வழிமுறைகளை தயாரித்தல், கேள்வி கோரல் செயற்பாடுகள், ஆளணி செயற்பாடுகள், அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களின் நிர்வாக நடவடிக்கைகள் தொடர்பான கடமைகள் மற்றும் உற்பத்தித்திறன், மேம்படுத்தல் நடவடிக்கைகள் போன்ற பல பணிகள் இதன்கீழ் மேற்கொள்ளப்படுகின்றது.*

### I. ஆளணி செயற்பாடுகள்

அமைச்சில் தற்போது சேவையில் ஈடுபட்டுள்ள ஆளணியினர் 117 ஆகும். இந்த ஆளணியின் அனைத்து அலுவலர்களினதும் சுயவிபரக்கோவையை முறைப்படி பேணுதல், இற்றைப்படுத்தல், அன்றாட விடுமுறை தொடர்பான கடமைகள், படியேற்றம் வழங்குதல், இடமாற்றம், ஓய்வு பெறுதல் போன்ற நிர்வாக நடவடிக்கைகள் உரியவாறு மேற்கொள்ளப்பட்டுள்ளது. அத்துடன் ஆளணியினருக்கு உத்தியோக அடையாள அட்டை வழங்குதல், அதிகாரிகளது தொலைபேசி பற்றுச்சீட்டுக்களை தீர்த்தல் தொடர்பான நடவடிக்கைகளும் இப்பிரிவின் ஊடாக மேற்கொள்ளப்படும்.

ஆளணியின் அறிவு, தொழிநுட்ப தகைமை மற்றும் மொழி பாண்டித்தியத்தை மேம்படுத்தலை இலக்காகக் கொண்டு உள்நாட்டு, வெளிநாட்டு பயிற்சி பாடநெறிகளுக்காக அலுவலர்களை தொடர்ச்சியாக ஈடுபடுத்தியுள்ளது. இதன் கீழ் 2013 ஆண்டில் பயிற்சி பாடநெறி செயலமர்வு நிமித்தம் பின்வருமாறு ஆளணி ஈடுபடுத்தப்பட்டது.

## உள்நாட்டு பயிற்சி நெறிகளில் ஆளணியினரை ஈடுபடுத்தல்

| பயிற்சி நெறி / கருத்தரங்கு | பங்குபற்றிய அலுவலர்கள் எண்ணிக்கை |
|---|---|
| ❖ தமிழ் மொழி பாடநெறி | 09 |
| ❖ சிங்கள டிப்ளோமா | 01 |
| ❖ ஒழுங்காற்று ஒழுங்கு விதிகள் | 03 |
| ❖ அரச ஆவண நிர்வாக மற்றும் ஆவணப்படுத்தல் சட்டம் | 01 |
| ❖ கேள்விகோரல் நடைமுறைகள் | 05 |
| ❖ கருத்திட்ட பிரேரணைகளை தயாரித்தல் | 01 |
| ❖ கணக்குவைத்தல் மென்பொருள் | 04 |
| ❖ சம்பளம் தயாரித்தல் | 02 |
| ❖ களஞ்சியம், வழங்கள் கட்டமைப்பு முகாமைத்துவம் | 01 |
| ❖ பாதுகாப்பான, விஞ்ஞான பூர்வமான சிக்கனமான வாகன செலுத்துகை | 01 |
| ❖ சிறந்த சுகாதார பழக்கங்களை வாழ்க்கையுடன் சேர்த்தல் | 03 |
| | 02 |

## வெளிநாட்டு பயிற்சி நெறிகளுக்காக ஆளணியினரை ஈடுபடுத்தல்

| பயிற்சிநெறி / கருத்தரங்கு | நாடு | அலுவலர் பெயர் | பதவி |
|---|---|---|---|
| ❖ ஏற்றுமதியில் தங்கியுள்ள பொருளாதாரம் | சீனா | திரு டபி.ஏ.எஸ் இரோசன் | உதவிப் பணிப்பாளர் (திட்டமிடல்) |
| ❖ விவசாயத்தில் தகவல் தொழிநுட்ப பயன்பாடு | சீனா | செல்வி. ஜீ.பீ.எச்.எம் குமாரசிங்க | உதவி பணிப்பாளர் (அபிவிருத்தி) |
| ❖ - அதே - | - அதே - | திரு. எச்.எம்.பி.பீ வீரசிங்க | பெருந்தோட்ட மேற்பார்வை அலுவலர் |

## 2013 ஆண்டில் கடமைகளுக்காக வெளிநாடு சென்றதற்குரிய விபரங்கள்

| தொ. இல. | பெயர் | பதவி | சுற்றுலா மேற்கொள்ளப்பட்ட நாடு / நாடுகள் | காலம் | செயற்றிட்டம் |
|---|---|---|---|---|---|
| 01 | திருமதி. சுதர்மா கருணாதிலக | செயலாளர் | சிங்கப்பூர் | 2013.05.19-2013.05.25 | உலக இறப்பர் மாநாடு, இறப்பர் கற்றல் குழுவின் வருடாந்த மாநாட்டில் கலந்து கொள்ளல். |
| 02 | திருமதி சுதர்மா கருணாதிலக | செயலாளர் | போலந்து, ஜெர்மனி | 2013.10.20-2013.10.27 | கௌரவ பிரதி அமைச்சர் உள்ளடங்களாக தூதுவர் குழுவுடன் தேயிலை பிரச்சார செயற்றிட்டத்திற்காக |
| 03 | திரு. ஜி.டி.டபி ஜயவர்தன | மேலதிக செயலாளர் (நிர்வாகம்) | டுபாய், ஆஜன்டீனா, சிலி, பிரேசில் | 2013.06.16-2013.06.27 | கௌரவ பிரதி அமைச்சர் உள்ளடங்களாக தூதுவர் குழுவுடன் தேயிலை பிரச்சார செயற்றிட்டத்திற்காக |
| 04 | திரு. ஜி.டி.டபி ஜயவர்தன | மேலதிக செயலாளர் (நிர்வாகம்) | அவுஸ்திரேலியா | 2013.09.13-2013.09.22 | கௌரவ அமைச்சர் உள்ளடங்களாக தூதுவர் குழுவுடன் தேயிலை பிரச்சார செயற்றிட்டத்திற்காக |
| 05 | திரு. யு.கே.எஸ். மிஹிந்துகுலசூரிய | மேலதிக செயலாளர் (அபிவிருத்தி) | ஐக்கிய அரபு ராஜ்ஜியம் | 2013.10.09-2013.09.11 | கௌரவ அமைச்சர் உள்ளடங்களாக தூதுவர் குழுவுடன் தேயிலை பிரச்சார செயற்றிட்டத்திற்காக |
| 06 | திரு. ஆர்.ஏ.டி.எஸ். ரணதுங்க | பணிப்பாளர் (அபிவிருத்தி) | சிங்கப்பூர் | 2013.05.19-2013.05.25 | உலக இறப்பர் மாநாடு, இறப்பர் கற்றல் குழுவின் வருடாந்த மாநாட்டில் கலந்து கொள்ளல். |
| 07 | திரு. ஆர்.எம். பிரேமதாச | பணிப்பாளர் (பெருந்தோட்ட கண்பாணிப்பு) | சீனா | 2013.01.03-2013.01.06 | கௌரவ பிரதி அமைச்சர் உள்ளடங்களாக தூதுவர் குழுவுடன் தேயிலை பிரச்சார செயற்றிட்டத்திற்காக |

தொழிலற்ற பட்டதாரிகளை அரச சேவைக்கு இணைத்துக் கொள்ளும் அரச கொள்கை தீர்மானத்துக்கமைய இந்த அமைச்சுக்கும் அதன் கீழுள்ள நிறுவனங்களுக்கும் இணைக்கப்பட்ட 31 பட்டதாரி பயிலுனர்களுக்கு அபிவிருத்தி அலுவலர்களாக நியமனம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## II. கட்டிடங்கள், அலுவலக உபகரணங்கள் தொடர்பான நடவடிக்கைகள்

அமைச்சுக்கு தேவையான அலுவலக உபகரணங்கள், மரத் தளபாடங்கள் கொள்வனவு செய்தல் தொடர்பிலான கடமைகளும், அமைச்சின் கீழுள்ள உத்தியோகபூர்வ விடுதிகளின் பராமரிப்பு தொடர்பான நடவடிக்கைகளும், அலுவலக சுற்றாடலை தூய்மையாக்கல் மற்றும் நல்ல நிலையில் பேணுதலும், நீர் கட்டணம், மின் கட்டணம், அலுவலக வாடகை செலுத்துதல் தொடர்பான நடவடிக்கைகளும் இந்த பிரிவினால் மேற்கொள்ளப்படுகிறது.

அத்துடன் ஆளணி நடவடிக்கைகளை இலகுபடுத்துதல், வினைத்திறனாக்கலுக்கு தேவையான கணணிகள், நிழற்பிரதி இயந்திரங்கள், அச்சிடல், இயந்திரங்கள், தொலைபேசி இயந்திரங்கள் போன்ற அலுவலக உபகரணங்களின் திருத்தம் மற்றும் சேவை நடவடிக்கைகளும் உரியவாறு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## III. நிறுவனங்களின் செயற்பாடுகள்

அமைச்சின் கீழ் செயற்படும் இலங்கைத் தேயிலைச் சபை, இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிறுவனம், சிறு தேயிலைத் தோட்ட அபிவிருத்தி திணைக்களம், இலங்கை இறப்பர் ஆராய்ச்சி நிறுவனம், தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனம், துருசவிய நிதியம், வரையறுக்கப்பட்ட களுபோவிற்றியான தேயிலை தொழிற்சாலை கம்பனி போன்ற நிறுவனங்களின் நிர்வாக, நிறுவன செயற்பாடுகள் தொடர்பில் நிர்வாக பிரிவு செயற்பட்டுள்ளது.

நிறுவனங்களின் பணிப்பாளர் சபை நியமனம், ஆளணியில் பதவிகளை உருவாக்குதல், நியமித்தல், பதவியுயர்த்துதல், ஆளணி சேவை பிரச்சனைகள் தொடர்பில் அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்படும் விடயங்கள் தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. அத்துடன் இந்த அலுவலர்களின் வெளிநாட்டு சுற்றுலா, புலமைப்பரிசில், பயிற்சி நெறிகள் போன்றவற்றுக்கு அங்கீகாரம் வழங்கலும், உரியவாறு விடுமுறை வழங்கலும் மேற்கொள்ளப்படுகிறது.

2013 ஆண்டில் நிறுவனங்களின் அலுவலா்களுக்கு வெளிநாட்டு சுற்றுலா, புலமைப்பரிசில், பயிற்சி நெறிகளுக்கு கீழ்வருமாறு அங்கீகாரம் வழங்கப்பட்டது.

| நிறுவனம் | அங்கீகாரம் வழங்கப்பட்ட அலுவலா்கள் தொகை |
|---|---|
| • இலங்கைத் தேயிலைச் சபை | 39 |
| • இலங்கைத் தேயிலை ஆராய்ச்சி நிறுவனம் | 11 |
| • சிறு தேயிலைத் தோட்ட அபிவிருத்தி அதிகாரசபை | 08 |
| • தேயிலை சக்தி நிதியம் | 02 |
| • இறப்பர் அபிவிருத்தித் திணைக்களம் | 07 |
| • இலங்கை இறப்பர் ஆராய்ச்சி நிறுவனம் | 11 |

விவசாய அபிவிருத்திக்கான சா்வதேச நிதியம் (IFAD) நிதியின் மூலம் இந்த அமைச்சின் கீழ் செயற்படும் சிறு பெருந்தோட்ட முயற்சியாண்மை அபிவிருத்தி செயற்திட்டத்துக்கு அலுவலா்களை ஆட்சோ்ப்பு செய்தல், சேவை நீடிப்பு செய்தல், படியேற்றம் வழங்கல், அந்த அலுவலா்களின் சுய விபரக்கோவைகளை பேணுதலும் நிா்வாக பிரிவினால் மேற்கொள்ளப்படுகிறது.

## IV. உற்பத்தித்திறன் மேம்பாட்டு செயற்பாடுகள்

வினைத்திறனுடைய மக்கள் சேவை, மனதுக்கினிய அலுவலக சூழலை ஏற்படுத்துவதற்காக அமைச்சின் உற்பத்தித்திறன் மேம்படுத்தல் நடவடிக்கைகள் இந்த ஆண்டிலும் தொடா்ச்சியாக மேற்கொள்ளப்பட்டது. அத்துடன் உற்பத்தித்திறன் செயலகத்தினால் நடாத்தப்படும் தேசிய உற்பத்தித்திறன் விருது போட்டிக்காக தோற்றுவதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

## கணக்கியல் பிரிவு

*அமைச்சின் நிதி முன்னேற்றம் தேறிய ஒதுக்கீட்டின் நூற்றுக்கு 96 சதவீதம் ஆகும். அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களுக்கு முழுமையான மதிப்பீடு செய்யப்பட்ட தொகையின் நூற்றுக்கு 95 வீதம் திறைசேரியால் வழங்கப்பட்டமை காரணமாக நிதி முன்னேற்றத்தை வெற்றிகரமாக அடையக் கூடியதாக இருந்தது. 2013 ஆண்டில் அரச அலுவலர்களின் முற்பண B கணக்கின் அங்கீகரிக்கப்பட்ட வரையறைக்குள் அமைச்சு அலுவலர்களுக்கு கடன், முற்பணமாக 4.2 மில்லியன் ரூபா வழங்கப்பட்டது. கேள்விகோரல் திட்டத்துக்கமைய சில கொள்வனவுகள் மேற்கொள்ள முடியாதிருந்த போதிலும் ஆண்டில் தேவைப்படும் பொருட்களைக் கொள்வனவு செய்ய முடியுமாயிருந்தது. 2012 ஆண்டின் பொருட் கணக்கெடுப்பு அறிக்கைக்கமைய பின்னாய்வு நடவடிக்கைகள் முடிவுறுத்தப்பட்டன. 2012 ஆண்டில் அமைச்சின் நடவடிக்கைகள் தொடர்பில் கிடைத்திருந்த 14 கணக்காய்வு வினாக்களுக்கு பதில் அனுப்பப்பட்டுள்ளது. அமைச்சின் கீழுள்ள சிறு பெருந்தோட்ட முயற்சியாண்மை அபிவிருத்தி கருத்திட்டத்தின் 2012 ஆண்டுக்கான கணக்காய்வாளர் நாயத்தின் அறிக்கை பெறப்பட்டு தேவையான நடவடிக்கைகளுக்காக IFAD நிறுவனத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது. 2013 ஆண்டுக்குரிய ஒதுக்கீட்டு கணக்கு மற்றும் அ.அ.மு. B கணக்கு 2014–03–31 திகதி வரை தயாரிக்கப்பட்டுள்ளது.*

## 2013 ஆண்டில் நிதி முன்னேற்றம்

### I. செலவு மதிப்பீடு

ரூ. '000

| | 135 -1-1 அமைச்சு அலுவலகம் | | 135-1-2 நிர்வாக, தாபன சேவை | | 135-2-3 பெருந்தோட்ட அபிவிருத்தி செயற்திட்டம் | | 135-2-4 பெருந்தோட்ட அபிவிருதத்தி நிறுவனம் | | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | மீண் டெழும் | மூல தனம் | மீண் டெழும் | மூல தனம் | மீண் டெழும் | மூல தனம் | மீண் டெழும் | மூல தனம் | |
| 1. மதிப் பீட்டு ஒதுக்கீடு | 55,400 | 6,350 | 52,110 | 4,000 | 34,190 | 457,950 | 864,200 | 516,000 | 1,990,200 |
| 2. நி.பி.66 இன் கீழ் மாற்றம், முழு ஒதுக்கீடு | 400 | - | (400) | 6098 | - | - | - | - | 6,098 |
| 3. தேறிய ஒதுக்கீடு | 55,800 | 6,350 | 51,710 | 10,098 | 34,190 | 457,950 | 864,200 | 524,000 | 2,004,298 |
| 4. செலவு | 54,998 | 3,172 | 45,943 | 9,203 | 31,247 | 453,872 | 822,032 | 502,446 | 1,922,913 |
| 5.செலவு வீதாசாரம் | 99% | 50% | 89% | 91% | 91% | 99% | 95% | 96% | 96% |

❖ செலவு நிமித்தம் நிதியிடல்

ரூ'000

| செலவின நிதியிடல் | | செலவு |
|---|---|---|
| 11 | - உள்நாட்டு நிதி | 1,474,484 |
| 12 | - வெளிநாட்டுக் கடன் | 421,935 |
| 17 | - வெறிநாட்டு நிவாரணத்துடனான உள்நாட்டு நிதி | 26,494 |

## II. வருமானம் – பிராந்திய தோட்ட கம்பனிகளில் கிடைக்கும் வாடகைக் கொள்வனவு கூலி

❖ 2013 ஆண்டில் கிடைக்க வேண்டிய வருவாய்

ரூ '000

| வருமானத் தலைப்பு | வருடாந்த வருமான மதிப்பீடு | திருத்திய வருமான மதிப்பீடு | கிடைத்த வருவாய் | கிடைத்த வருமானத்தின் விகிதாசாரம் |
|---|---|---|---|---|
| 20.02.01.04 | 1,020,627 | 950,028 | 694,530 | 73% |

❖ 2013.12.31 திகதிக்கான வருமான நிலுவை

ரூ '000

| வருமானத் தலைப்பு | 2013.01.01 திகதிக்கான வருமான நிலுவை | 2013 வருடத்தின் அறவீடுகள் | நிலுவை வருமான அறவிடலின் விகிதாசாரம் |
|---|---|---|---|
| 20.02.01.04 | 300,689 | 193,961 | 65% |

## III. அரச அலுவலர்களது முற்பணம் “பீ” கணக்கு

ரூ '000

| | செலவின் உச்ச எல்லை | கிடைப்பனவுகளின் குறைந்த எல்லை | அதிகபட்ச பற்று மீதி எல்லை |
|---|---|---|---|
| ஒதுக்கீட்டு சட்டத்தின் அதிகாரம் வழங்கப்படும் எல்லை | 6,000 | 2,800 | 30,000 |
| வருட இறுதியில் பெறுமதி நிலை | 4,227 | 5,183 | 15,647 |

# உள்ளக கணக்காய்வுப் பிரிவு

## பணிகள்

- அமைச்சு, அமைச்சின் கீழ் செயற்படும் கருத்திட்டங்களின் நிதி மற்றும் நிறுவன நடவடிக்கைகள் கணக்காய்வு செய்யப்பட்டு அறிக்கையிடல்
- தவறு மற்றும் மோசடிகளை தவிர்ப்பதற்காக அமைச்சில் செயற்படுத்தப்படும் கட்டுப்பாட்டு முறைமை, திட்டமிடல் ரீதியாகவும், செயற்பாட்டு ரீதியாகவும் வெற்றிகரமானதா என ஆராய்ந்து பார்த்தல் மற்றும் அது தொடர்பான அவதானிப்புகள் மற்றும் முன்மொழிவுகள் சமர்ப்பித்தல்
- அமைச்சின் கணக்கு மற்றும் வேறு அறிக்கைகளின் நம்பகத்தன்மையை நிச்சயித்தல் மற்றும் அமைச்சின் சொத்துக்களை அனைத்து முறையான சேதங்களிலிருந்தும் உச்ச பட்சமாக பாதுகாக்கப்பட்டதா என ஆராய்ந்து பார்த்தல் மற்றும் அறிக்கையிடல்
- வரையறுக்கப்பட்ட களுபோவிட்டியான தேயிலை தொழிற்சாலை கம்பனி, தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனம், துருசவிய நிதியம் போன்றவற்றின் நடவடிக்கைகளை கணக்காய்வு செய்தல், அறிக்கையிடல்
- அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களில் கீழ்வரும் நடவடிக்கைகள் தொடர்பிலான முன்னேற்ற மீளாய்வு செய்வதற்காக மூன்று (03) மாதங்களுக்கொரு தடவை கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டம் நடாத்துதல்.
  - உள்ளக கணக்காய்வு பிரிவு நடவடிக்கைகள்.
  - கணக்காய்வாளர் நாயகத்தினால் விடுக்கப்படும் கணக்காய்வு விசாரணைகள்/ கணக்காய்வு அறிக்கைக்கான பதில் வழங்கள்.
  - ஒவ்வோர் நிறுவனங்களிலும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டம் நடாத்துதல்.
  - வருடாந்த கேள்விகோரல் திட்டத்தை அமுல்படுத்தல்.
  - வருடாந்த அறிக்கை / செயற்பாட்டு அறிக்கைகளை பாராளுமன்றத்துக்கு சமர்ப்பித்தல்.
  - வருடாந்த பொருட்கணக்கெடுப்பு நடாத்துதல்.
  - ஒவ்வொரு நிறுவனங்களினதும் தனியான நிதி நடவடிக்கைகள் மற்றும் நிர்வாக நடவடிக்கைகள்.
- அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களில் வருடாந்த செயற்பாட்டு திட்டத்துக்கமைய நடவடிக்கை எடுப்பதில் தாமதத்துக்கு ஏதுவான பிரச்சனைகளை கணக்காய்வு செய்தல் மற்றும் அறிக்கையிடல்
- தேவையான சந்தர்ப்பங்களில் அமைச்சினதும், அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களினதும் நடவடிக்கைகள் தொடர்பில் விசேட புலனாய்வு மேற்கொள்ளல் மற்றும் அறிக்கையிடல்

# 2013 ஆண்டின் முன்னேற்றம்

## I. உள்ளக கணக்காய்வு மற்றும் விசேட புலனாய்வு நடவடிக்கைகள்

- அமைச்சின் கீழுள்ள சிறிய பெருந்தோட்ட முயற்சியாண்மை அபிவிருத்தி செயற்திட்டத்துக்குரிய மொனராகலை உப அலுவலகத்தினால் 2012 ஆண்டில் அமுல்படுத்தப்பட்ட வீதி நிர்மான கருத்திட்டம் தொடர்பாக விசேட புலனாய்வு மேற்கொள்ளப்பட்டது. அதன்போது தெரியவந்த குறைபாடுகள் தொடர்பாக அறிக்கை செய்யப்பட்டுள்ளதுடன் அவற்றை சீர்செய்வதற்காக எடுக்கப்படும் நடவடிக்கைகள் தொடர்பில் பின்னாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- அமைச்சின் கீழுள்ள சிறிய பெருந்தோட்ட முயற்சியாண்மை அபிவிருத்தி செயற்திட்டத்துக்குரிய கம்பளை உப அலுவல வெளிக்கள அலுவலர்களின் கடமைகள், களஞ்சிய நடவடிக்கைகள், வாகன பராமரிப்பு, முற்பண கொடுப்பனவு, விடுமுறை பதிவேடு பேணுதல், வெளிச்செல்லும் பதிவேடு பேணுதல் போன்ற விடயங்கள் கணக்காய்வுக்கு உட்படுத்தப்பட்டது. அதில் கண்டுபிடிக்கப்பட்ட குறைபாடுகளை சீர்செய்வதற்காக எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாகவும் அறிக்கை செய்யப்பட்டுள்ளது. அக்குறைபாடுகளை சீர்செய்வதற்க்காக எடுக்கப்படும் நடவடிக்கைகள் தொடர்பில் பின்னாய்வும் மேற்கொள்ளப்பட்டது.
- தேயிலை சக்தி நிதியத்துக்குரிய தெரெணியகல தேயிலை தொழிற்சாலையின் செயற்பாடுகள் தொடர்பாக கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. அதில் கண்டுபிடிக்கப்பட்ட குறைபாடுகள் தொடர்பாக அறிக்கை செய்யப்பட்டுள்ளது. அக்குறைபாடுகளை சீர்செய்வதற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் தொடர்பாக 2014 ஆண்டில் மீள்பரிசீலனை செய்யப்படவுள்ளது
- வரையறுக்கப்பட்ட களுபோவிற்றியான தேயிலை தொழிற்சாலை கம்பனியின் பிரதான அலுவலகத்தில் தேயிலை மொத்த விற்பனை தொடர்பான கட்டுப்பாட்டு முறை, கேள்விகோரல் செயற்பாடுகள் மற்றும் கொடுப்பனவுகள் தொடர்பாக கணக்காய்வு செய்யப்பட்டது. அக் குறைபாடுகளை சீர்செய்வதற்க்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் தொடர்பாக 2014 ஆண்டில் பரிசீலனை மேற்கொள்ளப்படவுள்ளது.
- துருசவிய நிதியத்தின் வெளிக்கள அலுவலர்களது கடமைகள் தொடர்பாக கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. அதில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள குறைபாடுகள் மற்றும் அவற்றை சீர்செய்வதற்காக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் அறிக்கை செய்யப்பட்டுள்ளது. இக் குறைபாடுகளை சீர்செய்வதற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் தொடர்பில் 2014 ஆண்டில் பரிசீலனை செய்யப்படவுள்ளது.
- வரையறுக்கப்பட்ட களுபோவிற்றியான தேயிலை தொழிற்சாலை கம்பனிக்குரிய, தெரங்கல தேயிலை தொழிற்சாலையின் பச்சை தேயிலை கொழுந்தினை பெற்றுக்கொள்ளும் செயன்முறை, களஞ்சிய செற்பாடுகள் மற்றும் கொடுப்பனவு நடவடிக்கைகள் தொடர்பாக கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. அதில் கண்டுபிடிக்கப்பட்ட குறைபாடுகள் மற்றும் அவற்றை சீர்செய்வதற்காக எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக அறிக்கை செய்யப்பட்டுள்ளது. அக்குறைபாடுகளை சீர்செய்வதற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் தொடர்பாக 2014 ஆண்டில் பரிசீலிக்கப்படவுள்ளது.
- தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனத்தின் களஞ்சிய நடவடிக்கைகள் மற்றும் பாடநெறி கட்டண நிலுவையை அறவிடுதல் தொடர்பாக கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. அதன்போது கண்டுபிடிக்கப்பட்ட குறைபாடுகளை சீர்செய்வதற்காக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக அறிக்கை செய்யப்பட்டுள்ளது.

- தேயிலை சக்தி நிதியத்தால் மருத்துவ சிட்டை மீள்நிரப்பல் செய்யப்படும்போது நடைபெற்றுள்ள முறைகேடுகள் தொடர்பாக, இலங்கைத் தேயிலைச் சபையின் வினைமனுக்கோரல் நடவடிக்கைகள் தொடர்பிலும், தேயிலை மற்றும் இறப்பர், தென்னங் காணிகள் (துண்டாடல் கட்டுப்பாடு) சபையின் காணிகள் துண்டாடப்படுவதற்கு வழங்குதல் தொடர்பில் விசேட புலனாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதன்போது தெரியவந்த குறைபாடுகள் அறிக்கை செய்யப்பட்டுள்ளது.

## II. வேறு செயற்பாடுகள்

பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களில் நிதி நிர்வாகம், கணக்காய்வு நடவடிக்கைகள் மற்றும் பொதுவான நிர்வாக நடவடிக்கைகளை மீளாய்வு செய்வதற்காக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கூட்டங்கள் 04 நடாத்தப்பட்டது. அதன்மூலம் அந்த நிறுவனங்களின் நடவடிக்கைகள் தொடர்பாக அமைச்சு மட்டத்தில் மேற்பார்வை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## அபிவிருத்தி பிரிவு

*2013 ஆண்டில் அபிவிருத்தி பிரிவினூடாக தேயிலை, இறப்பர், பாம் பயிர்ச்செய்கை அபிவிருத்திக்காகவும் அந்த பயிர்கள் சார்ந்த கைத்தொழில் மற்றும் பெறுதி சேர்க்கப்பட்ட உற்பத்திகளை மேம்படுத்துவதற்காகவும் கீழ்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.*

## நிறைவேற்றிய முழு செயற்பாடுகள்

- ❖ பெருந்தோட்டத் துறையின் அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பாக கொள்கை ரீதியான தீர்மானமெடுக்கும் செயல்முறைகளுக்கு உதவுதல், ஆலோசனை வழிகாட்டல் தயாரித்தல், அமுல்படுத்தல்.
- ❖ அமைச்சரவை தீர்மானத்துக்கமைய அமைச்சின் கீழுள்ள அனைத்து நிறுவனங்களினதும் சட்டங்கள் நவீன தேவைக்குகந்தவாறு மாற்றம் செய்யும் நடவடிக்கைகளை தொடர்ந்தும் மேற்கொள்ளுதல். இது தொடர்பில் அமைச்சரவையால் அமைச்ச செயலாளரின் தலைமையில் நிதி, திட்டமிடல் அமைச்சு, பொருளாதார அபிவிருத்தி அமைச்சு, தொழிநுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சு, கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சு, மத்திய வங்கி ஆகியவற்றின் பிரதிநிதிகளின் பங்கேற்புடன் அமைக்கப்பட்டுள்ள குழுவை கூட்டுதல், தீர்மானத்தை அமுல்படுத்தல் மற்றும் வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்க நடவடிக்கை எடுத்தல். அதற்கமைய சிறிய தேயிலைத்தோட்ட அபிவிருத்தி அதிகாரசபை, தேயிலை ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் தேயிலை சக்தி

நிதியம் ஆகிய நிறுவனங்களின் சட்டங்கள் தொடர்பில் மேற்கொள்ளவேண்டிய திருத்தங்களை அமைச்சரவைக்கு சமர்ப்பிப்பதற்கும், ஏனைய நிறுவனங்களின் திருத்தங்கள் தொடர்பான இறுதி குழு விதந்துரையை பெறுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

- ❖ சர்வதேச விவசாய அபிவிருத்தி நிதியத்தின் நிதியொதுக்கீட்டில் அமுல்படுத்தப்படும் சிறு பெருந்தோட்ட முயற்சியாண்மை அபிவிருத்தி செயற்திட்டம் தொடர்பிலான கொள்கை வகுத்தல், நடைமுறைப்படுத்தல் மற்றும் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல்.
- ❖ 2013 மார்ச் மாதம் அம்பாறை ஹாடி நிறுவனத்தில் நடைபெற்ற தேசத்திற்கு மகுடம் தேசிய அபிவிருத்தி கண்காட்சிக்கு அமைச்சின் கீழுள்ள அனைத்து நிறுவனங்களும் பங்குபற்றியமை.
- ❖ நிறுவனத்தின் மூலம் மேற்கொள்ளப்படும் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக கொள்கைரீதியான ஆலோசனை வழிகாட்டல்களை வழங்குதலும், அது தொடர்பில் ஏற்படும் சிக்கலான நிலமைகளுக்கு தீர்வு வழங்க நடவடிக்கை எடுத்தல்.
- ❖ பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சின் கீழுள்ள அனைத்து நிறுவனங்களினதும், வெளிநாட்டு உதவியில் செயற்படுத்தப்படும் கருத்திட்டங்களின் முன்னேற்ற மீளாய்வு செய்தல் மற்றும் உயர் செயற்திறன் மட்டத்தை பேணுவதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல்.
- ❖ அமைச்சின் இணைய தளத்தை இற்றைப்படுத்தல்.
- ❖ தேயிலை, இறப்பர் தொடர்பான சர்வதேச அமைப்புடன் ஒருங்கிணைந்து செயற்படுதல் மற்றும் எட்டப்படும் உடன்படிக்கைகளை அமுல்படுத்தலை ஒருங்கிணைத்தல்.
- ❖ அமைச்சின் அபிவிருத்தி செயற்பாடுகள் தொடர்பில் ஊடகங்களுக்கு தகவல் வழங்குதல்.
- ❖ தேசிய பெருந்தோட்ட விருது – 2013 இற்காக மதிப்பீட்டு நடவடிக்கைகள் மற்றும் விழா ஏற்பாடுகளை ஒருங்கிணைத்தல்.
- ❖ அமைச்சின் கீழுள்ள அனைத்து நிறுவனங்களினதும் வருடாந்த அறிக்கைகளை ஆராய்தல், அவதானிப்புக்களை சமர்ப்பித்தல், வரைவுகளை அங்கீகரித்தல், இறுதி அறிக்கையை அமைச்சரவைக்கு சமர்ப்பித்தல்.

## தேயிலைத் துறை

- ❖ தேயிலைத் துறையின் செயற்பாடுகளுக்கு தேவையான கொள்கை ரீதியான வழிகாட்டல் மற்றும் அமுல்படுத்தல்
- ❖ 2013 ஜனவரி மாதத்தில் உலக தேயிலை உற்பத்தி நாடுகளின் அமைச்சர்களின் கூட்டம் நடாத்துதல் தொடர்பான ஏற்பாடுகள் மற்றும் ஒருங்கிணைத்தல்
- ❖ தேயிலை நடுகை பொருள், தேயிலை கொழுந்தின் தரத்தை உயர்த்துதல், தேயிலை தோட்டங்களை அபிவிருத்தி செய்தல், தேயிலை மீள்பயிரிடல் மானியம் போன்ற விடயங்கள் தொடர்பில் உத்தரவு தயாரித்தல் மற்றும் அந்த உத்தரவுகளை திருத்தம் செய்தல் தொடர்பாக கலந்துரையாடுதல் மற்றும் தேவையான நடவடிக்கை எடுத்தல்.

- ❖ நிராகரிக்கப்பட்ட தேயிலையை தரப்படுத்தி தரப்படுத்தப்பட்ட தேயிலையை ஏலத்துக்கு விடுவதற்கும், மீதமாகும் பயன்படுத்த முடியாத தேயிலையை அழிப்பதற்காக தயாரிக்கப்பட்ட அமைச்சரவைக்கு சமர்ப்பித்தல் மற்றும் அமைச்சரவை உபகுழுவின் கலந்துரையாடலில் பங்கேற்றல்.
- ❖ தேயிலை மேம்பாடு மற்றும் பிரச்சார நிதியத்தின் கீழ் செலவு செய்து இலங்கை தேயிலை சபை மூலமாக பொதுநலவாய அரச தலைவர்கள் மாநாட்டின் வர்த்தக சந்திப்பை நடாத்துவதற்கும், இலங்கை கிரிக்கட் அணிக்கு அனுசரணை வழங்குவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் பெறுதல் தொடர்பான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுதல்.
- ❖ மேன்மைதங்கிய ஜனாதிபதி 2013 வரவுசெலவுதிட்ட உரையில் முன்மொழியப்பட்டவாறு சிறு தேயிலை தோட்டதுறையில் கொழுந்து பறித்தலை இயந்திரமயமாக்குவதற்காக உற்பத்தித்திறன் நிகழ்ச்சித்திட்டம் தேயிலை ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் சிறு தேயிலை தோட்ட அபிவிருத்தி அதிகாரசபையுடன் இணைந்து அமுல்ப்படுத்துதல் தொடர்பிலான ஆரம்ப கலந்துரையாடல் நடாத்துதல் மற்றும் தொடர்புடைய நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல்.
- ❖ தேயிலை சக்தி நிதியத்தின் கீழ் அமுல்ப்படுத்தப்படும் தொழிற்சாலைகள் மற்றும் தற்போது நிர்மாணிக்கப்பட்டுவரும் கண்டி தேயிலை சக்தி தொழிற்சாலையின் நிர்மாண நடவடிக்கைகள் தொடர்பில் தொடர்ச்சியாக கலந்துரையாடல் நடாத்துதல், முன்னேற்ற மீளாய்வு செய்தல் மற்றும் தேவையான ஆலோசனை வழங்கல்.
- ❖ தேயிலை தொழிற்துறையில் அபிவிருத்தி செயற்பாடுகள் தொடர்பில் அமைச்சின் கீழுள்ள அனைத்து நிறுவனங்கள் மற்றும் பங்குதாரர்களுடன் இணைந்து செயற்படுதல்.
- ❖ பச்சை தேயிலை கொழுந்தின் தரத்தை உறுதிப்படுத்துவதற்காக இலங்கை தேயிலை சபையால் “B – Leat 60” செயற்திட்டம் அமுல்படுத்தப்படுவதற்காக வழிகாட்டல்களை வழங்குதல்.

## இறப்பர் துறை

- ❖ இறப்பர் துறையின் செயற்பாடுகளுக்கு தேவையான கொள்கை ரீதியான வழிகாட்டல் தயாரித்தல், அமுல்படுத்துதல்.
- ❖ பாரம்பரியமற்ற பிரதேசங்களில் இறப்பர் பயிரை பரவலடைய செய்வதற்காக விசேட நடவடிக்கை எடுத்தல், இதன்கீழ் அம்பாறை மாவட்ட இறப்பர் பயிரிடும் திட்டத்தின்கீழ் மேற்கொண்ட செயற்பாடுகளை ஒருங்கிணைத்தல் மற்றும் முன்னேற்ற மீளாய்வு.
- ❖ வட பிரதேசத்தில் இறப்பர் செய்கையை விரிவாக்குவதற்க்காக செயற்பாட்டு குழு நியமிக்கப்பட்டு பல்வேறு நிறுவனங்களுடன் ஒருங்கிணைத்தல் மற்றும் கொள்கை வகுத்தல்.
- ❖ இறப்பர் துறையின் நாற்று பண்ணை அபிவிருத்தி மற்றும் நாற்றுக்களின் தரத்தை மேம்படுத்துதல், விசேட செயற்திட்டத்தை ஆரம்பித்தல், நாற்று பண்ணைகளில் வெளிக்கள பரிசோதனை நடாத்துதல்.
- ❖ இறப்பர் செய்கை தொடர்பான பங்குதாரர்களுடன் ஒருங்கிணைதல்.

- இறப்பர் புதிய பயிர்ச்செய்கை மற்றும் மீள் நடுகைக்காக வழங்கப்படும் மானியத்தை அதிகரிப்பதற்குரிய ஒழுங்கு விதிகளை விதித்தல் தொடர்பான செயற்பாடுகளை மேற்கொள்ளுதல்.
- இயற்கை இறப்பர் உற்பத்தி செய்யப்படும் நாடுகளுக்கு சங்கத்தின் வருடாந்த அமர்வு மற்றும் வருடாந்த இறப்பர் மாநாடு 2013 அக்டோபர் 8-13 வரையான காலப்பகுதியில் இலங்கையில் நடாத்துதலை ஒருங்கிணைத்தல்.
- சர்வதேச இறப்பர் ஆய்வு குழுவின் வருடாந்த அமர்வில் பங்குபற்றுதல் மற்றும் எடுக்கப்படும தீர்மானங்களை அமுல்படுத்துதல்.

## பாம் துறை

- பாம் பயிரிலிருந்து பெற்றுக்கொள்ளக்கூடிய பயன்பாடுகள் மற்றும் அதனை பரவலடையச் செய்தலின் முக்கியத்துவம் தொடர்பாக மேற்கொள்ளப்படும் ஆய்வுகள் மற்றும் பிரச்சார நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல்.
- பாம் பயிரை பரவலடைய செய்வதற்காக விதை இறக்குமதி செய்யும்போது தீர்வை நிவாரணம் வழங்குவதற்கு விதந்துரை வழங்குதல்.

# திட்டமிடல் பிரிவு

## நிறைவேற்றப்பட்ட முதன்மை செயற்பாடுகள்

- 2013 ஆண்டுக்குரிய அமைச்சின் செயற்பாட்டு திட்டத்தை தயாரித்து நிதி, திட்டமிடல் அமைச்சுக்கும், தொடர்புடைய நிறுவனங்களுக்கும் சமர்ப்பித்தல்.
- அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களில் ஆண்டின் ஒவ்வொரு காலாண்டுக்குமான முன்னேற்ற அறிக்கை தயாரித்து சமர்ப்பித்தல்.
- தேயிலை, இறப்பர் துறைகளின் நீணடகால அபிவிருத்திக்காக 2013 ஆண்டில் ஒவ்வொரு நிறுவனத்தினாலும் சமர்ப்பிக்கப்பட்ட 04 கருத்திட்ட பிரேரணைகள் தேசிய திட்டமிடல் திணைக்களத்துக்கு சமர்ப்பித்தல்.
- 2013 டிசம்பர் 05 திகதி நடாத்தப்பட்ட பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சின் வரவு செலவுத்திட்ட கலந்துரையாடல் தொடர்பான முன்னேற்ற அறிக்கை – 2013 தயாரிக்கப்பட்டு பாராளுமன்றத்துக்கு சமர்ப்பித்தல்.

- இலங்கை மத்திய வங்கியின் வருடாந்த அறிக்கை – 2012 மற்றும் அண்மைக்கால பொருளாதார போக்கு – 2013 ஆகியவற்றுக்குரிய பெருந்தோட்ட துறையின் முன்னேற்றங்களை உரிய மாதிரியில் தயாரித்து இலங்கை மத்திய வங்கிக்கு சமர்ப்பித்தல்.

- அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களின் ஐந்து ஆண்டு திட்டத்தை இற்றைப்படுத்தல் செயன்முறையை ஒருங்கிணைப்பு செய்தல்.

- மாவட்ட விவசாய குழு கூட்டத்துக்குரிய தகவல்களை வழங்குதல்.

- வாழ்வெழுச்சி தேசிய அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் பொருளாதார அபிவிருத்தி அமைச்சிலிருந்து கிடைத்த 50 மில்லியன் நிதியொதுக்கீட்டை பயன்படுத்தி, 17.1 ரூபா மில்லியன் செலவில் சிறு தேயிலை செய்கையாளர்களை ஊக்குவிப்பதற்காகவும் 31.2 மில்லியன் ரூபா செலவில் சிறு இறப்பர் செய்கையாளர்களை ஊக்குவிப்பதற்காகவும் செயற்திட்டங்களை அமுல்படுத்த தேவையான ஒருங்கிணைப்பு பணிகளை மேற்கொள்ளுதல்

- 2012 ஆண்டில் அமைச்சின் வருடாந்த செயற்பாட்டு அறிக்கையை தயாரித்து அமைச்சரவையின் அங்கீகாரத்துக்காக சமர்ப்பித்தல்

- பெருந்தோட்ட பயிர்கள் தொடர்பான 2012 ஆண்டின் தகவல்கள் உள்ளடங்கிய புள்ளிவிபர ஆவணத்தை தயாரித்தல்

- காணி பயன்பாட்டு கொள்கை திட்டமிடல் திணைக்களத்துடன் இணைந்து செயற்படுத்தப்படும் பூகோள தகவல் கட்டமைப்பை (GIS) பயன்படுத்தி தேயிலை, இறப்பர், பாம் காணிகளை வரைபடமாக்கும் செயற்திட்டத்துக்குரியதாக காலி மாவட்டத்தில் அமுல்படுத்தப்பட்ட முன்னோடி கருத்திட்டத்தை ஒருங்கிணைத்தல்

- சிரேஷ்ட அமைச்சர்கள் செயலகத்தினால் மேற்கொள்ளப்பட்ட இலங்கை மனிதவள ஊழியர் கொள்கை (NHREP) தயாரித்தல் தொடர்பான பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சின் செயற்திட்ட தயாரித்தலை ஒருங்கிணைத்தல்.

- சுற்றாடல் அமைச்சினால் தயாரிக்கப்பட்டு முன்கொண்டு செல்லப்படும் பெருந்தோட்ட துறைக்கான ‘‘தூய்மையான உற்பத்தி கொள்கை’’ தயாரிப்பதற்குரிய அடிப்படை ஒருங்கிணைப்பு நடவடிக்கையை மேற்கொள்ளல்.

# பெருந்தோட்ட முகாமைத்துவ மேற்பார்வை பிரிவு

*மக்கள் தோட்ட அபிவிருத்தி சபை (ஜனவசம) இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் (இ.அ.பெ.கூ) ஆகியவற்றின்கீழ் நிர்வகிக்கப்பட்ட 439 பெரிய தோட்டங்கள் 1992 இல் 23 பிரதேச பெருந்தோட்ட கம்பனிகளுக்கு உரித்தளிக்கப்பட்டு தனியார்மயப்படுத்தப்பட்டது. இத்தோட்டங்களிலுள்ள காணிகளின் உரிமை இப்போதும் ஜனவசம, இ.அ.பெ.கூ ஆகியவற்றின் கீழேயே இருப்பதுடன், தோட்டங்களின் நிர்வாகம் மற்றும் பயிர்கள் 53 வருட குத்தகை அடிப்படையில் பிரதேச பெருந்தோட்ட கம்பனிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. இந்த கம்பனிகளின் பொன்னான பங்காளராக திறைசேரி செயலாளருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை செயற்படுத்துவது இந்த பிரிவின் அதிகாரங்களை செயற்படுத்துவது இந்த பிரிவின் பணிப்பொறுப்பாகும்.*

### பொன்னான பங்குரிமையாளரின் அதிகாரங்கள்

அரசுக்கு உரித்தாக இருந்த பாரிய அளவான தோட்டங்கள் தனியார் மயப் படுத்தப்படும்போது அரசின் உரிமை, அதாவது பொன்னான பங்குரிமையாளர் நிதி அமைச்சின் செயலாளராவார். பொன்னான பங்குரிமையாளர் மற்றும் பொன்னான பங்குரிமையாளர்களின் அதிகாரங்கள் தொடர்பில் 23 பிரதேச பெருந்தோட்ட கம்பனிகளுக்கு பொருத்தமானவாறு தனித்தனியாக இருக்கும் தனித்துவமான யாப்புக்களின் விசேட பிரிவுகளின்கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது.

பொன்னான பங்குரிமையாளர்களின் அதிகாரங்கள் தொடர்பில் நடவடிக்கை எடுத்தல் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சுக்கு உரித்தளிக்கப்பட்டுள்ள பெருந்தோட்ட முகாமைத்துவ மேற்பார்வை பிரிவு அது தொடர்பில் நடவடிக்கை எடுக்கும்.

### தனியார் மயப்படுத்தப்பட்ட பிரதேச பெருந்தோட்ட கம்பனிகள்

- ஹபுகஸ்தென்ன பெருந்தோட்டக் கம்பனி
- புலாங்கொடை பெருந்தோட்டக் கம்பனி
- கஹவத்த பெருந்தோட்டக் கம்பனி
- மல்வத்த பெருந்தோட்டக் கம்பனி
- அகலவத்தை பெருந்தோட்டக் கம்பனி
- தலவாகலை பெருந்தோட்டக் கம்பனி
- களணிவெளி பெருந்தோட்டக் கம்பனி
- மதுரட்ட பெருந்தோட்டக் கம்பனி
- மடுல்சீமை பெருந்தோட்டக் கம்பனி
- புஸ்சல்லாவ பெருந்தோட்டக் கம்பனி
- உடபுசல்லாவ பெருந்தோட்டக் கம்பனி
- அக்கரப்பதன பெருந்தோட்டக் கம்பனி
- கொட்டகலை பெருந்தோட்டக் கம்பனி
- எல்பிட்டிய பெருந்தோட்டக் கம்பனி
- கேகாலை பெருந்தோட்டக் கம்பனி
- நமுனுகுல பெருந்தோட்டக் கம்பனி
- மஸ்கெலியா பெருந்தோட்டக் கம்பனி
- ஹொரணை பெருந்தோட்டக் கம்பனி
- வட்டவலை பெருந்தோட்டக் கம்பனி
- பொகவந்தலாவை பெருந்தோட்டக் கம்பனி

### தனியார் மயப்படுத்தப்படாத பிரதேச பெருந்தோட்டக் கம்பனிகள்.

- சிலாபம் பெருந்தோட்டக் கம்பனி
- எல்கடுவ பெருந்தோட்டக் கம்பனி
- குருநாகலை பெருந்தோட்டக் கம்பனி

# செயலாற்றுகை - 2013

1. பிரதேச பெருந்தோட்டக் கம்பனிகளின் கீழ் நிர்வகிக்கப்படும் பயிரிடக்கூடிய, ஆனால் பயிரிடப்படாத காணிகளை இனங்காணுதல்.

- ❖ பயிரிடக்கூடிய ஆனால் பயிரிடப்படாத காணிகளை இனங்காண்பதற்காக 2012 ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்புக்கமைய 10,000 ஹெக்டேயர் (25,000 ஏக்கர்) அளவிலும், 2011 ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்புக்கமைய 15,178 ஹெக்டேயர் (37,490) அளவாக இருந்ததாகவும் இனங்காணப்பட்டுள்ளது. பெருந்தோட்டக் கம்பனிகள் ஊடாக 5000 ஹெக்டேயருக்கு கூடுதலானளவு 2011 ஆண்டின் பின்னர் பயிர்ச்செய்கைக்காக பயன்படுத்தப்பட்டமையால் 2012 ஆண்டில் இந்த அளவு 10,000 ஹெக்டேயராக குறைவடைந்துள்ளது.

- ❖ மேற்கூறப்பட்டதற்கமைய, இனங்காணப்பட்ட காணிகளை பகிர்ந்தளிப்பதற்காக முறையான வேலைத்திட்டமொன்றை தயாரிப்பதற்க்காக குழுவொன்று 2012-01-31 திகதி ஜனாதிபதி செயலாளரால் நியமிக்கப்பட்டது. அக்குழுவால் தயாரிக்கப்பட்ட அறிக்கை மற்றும் உப குத்தகை ஒப்பந்த வரைபின் பிரதி 2012-07-05 திகதி ஜனாதிபதி செயலாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

- ❖ ஜனாதிபதி செயலாளரின் 2012-09-16 திகதிய கடிதத்தின் மூலம் இந்த பகிர்ந்தளிப்பு பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் வாழ்வெழுச்சி திணைக்களத்தினூடாக காணி சீர்திருத்த ஆணைக்குழு ஊடாக மேற்கொள்ள முன்மொழியப்பட்டு, அதற்காக உரிய அமைச்சுடன் இணைந்து தேவையான அடிப்படை செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு, முன்னேற்றத்தை அறிக்கை செய்யுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் 2012-09-11 திகதி நிதி, திட்டமிடல் அமைச்சு செயலாளரின் தலைமையிலும் ஏனைய தொடர்புடைய நிறுவன அலுவலர்களினதும் பங்களிப்புடன் கலந்துரையாடல் நடாத்தப்பட்டு, மேற்குறித்த குழு அறிக்கையின் முன்மொழிவுகளுக்கு மேலதிகமாக முன்மொழிவுகள் மற்றும் ஆலோசனைகள் வழங்கப்பட்டது.

- ❖ மேலும், 2013-04-29 திகதி கௌரவ பொருளாதார அபிவிருத்தி அமைச்சரினதும், பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரினதும் தலைமையில், ஏனைய தொடர்புடைய அரச அலுவலர்களின் பங்கேற்புடன் கூட்டம் நடாத்தப்பட்டு இந்த வேலைத்திட்டத்தின் தொடர் நடவடிக்கைகளை அமுல்படுத்துவதற்காக தீர்மானங்கள் எட்டப்பட்டு அதற்காக ஆலோசனைகள் வழங்கப்பட்டது. அந்த ஆலோசனைகளுக்கமைய மாவட்ட ரீதியில் பெருந்தோட்டக் கம்பனிகளின் கீழ் பயிரிடப்படாத ஆனால் பயிரிடக்கூடிய காணிகள் தொடர்பான ஆவணங்கள் உரிய அரச அதிபர்களிடமும், காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சு செயலாளரிடமும் வழங்கப்பட்டது.

- ❖ இருந்தபோதிலும், தோட்டங்களிலிருந்து காணிகளை விடுவித்தல் தொடர்பில் சிக்கலான நிலை ஏற்பட்டது. அதற்காக பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரால் அனைத்து தரப்பினரதும் பங்களிப்புடன் விசேட கூட்டம்

நடாத்தப்பட்டு இனங்காணப்பட்ட காணிகளின் சுற்றளவை அளத்தல் மற்றும் காணி பயன்பாட்டு திட்டத்தை தயாரிப்பதற்கு, உரிய பொறுப்பு உரித்தளிக்கப்பட்டுள்ள அரச அதிபர்களுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டது. அதன்படி நடவடிக்கை எடுப்பதற்கு அனைத்து பெருந்தோட்ட கம்பனிகளும் ஒப்புதல் தெரிவித்தன.

- ❖ காணி பயன்பாட்டு திட்டம் தயாரிக்கும்போது தொடர்ந்தும் சிக்கல்களிருப்பதாக அரச அதிபர்களால் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சுக்கு அறிவிக்கப்பட்ட பின்னர் வெளிகளரீதியாக சிக்கல் எழும்போது பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சின் அலுவலர்களையும் பங்குபற்றச்செய்து அந்த பிரச்சனைகளை தீர்த்துவைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. மேலும் அந்தந்த மாவட்டத்துக்கமைய இனங் காணப்பட்ட காணிகளை அளத்தல் மற்றும் காணி பயன்பாட்டு திட்டம் தயாரிக்கும் முன்னேற்றம் மாவட்ட செயலாளர்களிடமிருந்து பெறப்பட்டு வருகிறது.

- ❖ இந்த தோட்டங்கள் குத்தகை வழங்கும்போது அரசுக்கும், பெருந்தோட்டக் கம்பனிகளுக்குமிடையில் கையொப்பமிடப்பட்டுள்ள குத்தகை உடன்படிக்கையின் 3C பிரிவிற்கமைய தோட்ட கம்பனிகளிடமிருந்து காணிகளை பெறும்போது குத்தகை பெற்றவரின் எழுத்துமூல ஒப்புதல் பெறப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ளதனால் இருக்கும் சட்ட வரையறைக்குள் அந்த கம்பனிகளின் ஒப்புதலை பெற தேவை என்பதனால் காணி விடுவிக்கும் போது பெருந்தோட்டக் கம்பனிகளினால் தெரிவிக்கப்படும் எதிர்ப்புகள் தொடர்பில் கௌரவ சட்டமா அதிபரை தெளிவுபடுத்த நடவடிக்கை எடுக்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டது.





II. பிரதேச பெருந்தோட்டக் கம்பனிகளிடமிருந்து குத்தகை வாடகை அறவிடுதல்.

2013 ஆண்டில் அறவீடு செய்ய மதிப்பீடு செய்யப்பட்டுள்ள குத்தகை வாடகை 950 மில்லியன் ரூபாவாகும். அதில் 695 மி.ரூபா 2013-12-31 இல் அறவிடப்பட்டுள்ளது.

மேலே குறிப்பிட்ட 950 மி. ரூபாவில் அடங்கும் 2013-01-01 திகதிக்கு முன்னைய ஆண்டுக்காக அறவிடவேண்டியிருந்த குத்தகை வாடகை 300 ரூ.மில்லியனாகும். அத்தொகையை 2013-12-31 திகதியளவில் 116 மில்லியன் ரூபாவாக குறைக்க முடிந்துள்ளது.

III. பிரதேச பெருந்தோட்டக் கம்பனிகளின் நிதிப்பெறுபேற்று மீளாய்வு.

பிரதேச பெருந்தோட்டக் கம்பனிகளின் காலாண்டு மற்றும் வருடாந்த கணக்கு கூற்றுக்கள் உரியவாறு ஆய்வு செய்வதும், பகுப்பாய்வு செய்வதும், அதன்மூலம் தேவையான இடங்களில் திருத்தம் செய்வதற்கான ஆலோசனைகள் கம்பனிகளுக்கு வழங்கப்படுகிறது. இது தொடர்ச்சியாகவும், முறைப்படியும் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும் பெருந்தோட்டக் கம்பனிகளின் நிதி மற்றும் பௌதீக முன்னேற்றம் தொடர்பிலான தகவல் கட்டமைப்பு பேணப்படுவதுடன் தேவையான தகவல்களை தொடர்புடைய வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

IV. ஏனைய தொடர்புடைய அரச நிறுவனங்களின் பங்களிப்புடனும் பெருந்தோட்டக் கம்பனிகளால் நிர்வகிக்கப்படும் தோட்டங்களில் மரங்களை தறிப்பதற்குத் தேவையான அங்கீகாரம் வழங்குதல் தொடர்பில் இந்த பிரிவால் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. 2013-டிசம்பர்-31 வரையான காலத்தில் 10 பெருந்தோட்டக் கம்பனிகளின் கீழ் நிர்வகிப்படும் 55 தோட்டங்களில் மரம் தறித்தல் தொடர்பில் வெளிக்கள பரிசீலனை மற்றும் ஏனைய தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக ஏனைய பல்வேறு சந்தர்ப்பங்கள் தொடர்பாக (உதா: உயிர், உடமைகளுக்கு ஊறு விளைவிக்கக்கூடிய மரங்கள், அதிசக்தி வாய்ந்த மின்கம்பி நிறுவுவதற்காக அகற்றப்பட வேண்டிய மரங்கள், வீட்டுத் திட்டங்கள், விளையாட்டு மைதானம் போன்ற ஏனைய பொதுமக்கள் தேவைகளை நிறைவேற்றுவதற்காக தேவையான சந்தர்ப்பங்களில் அகற்றப்பட வேண்டிய மரங்கள் மற்றும் பயிர்களுக்கு நிழல் ஏற்படுத்தும் தேவையற்ற மரங்கள்) மரங்கள் அகற்றப்படுவதற்காக தேவையான அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.





V. பொது நடவடிக்கைகளுக்காக பிரதேச பெருந்தோட்டக் கம்பனிகளுடாக நிர்வகிக்கப்படும் காணிகளை விடுவிக்க தேவையானபோது அது தொடர்பில் பெருந்தோட்டக் கம்பனிகளின் ஒப்புதலுடன் பொன்னான பங்குரிமையாளர்களின் அங்கீகாரம் பெறுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் மற்றும் தேவையான சந்தர்ப்பங்களில் பொருத்தமான பரிசீலனை கொள்ளல் இந்த பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது.

2013-டிசம்பர்-31 வரையான காலத்தில் அதிவேக நெடுஞ்சாலை, கைத்தொழில் குடியேற்றங்கள், நீர் வசதிகள் வழங்குதல் மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தி போன்ற நடவடிக்கைகளுக்காக தோட்ட காணிகளை பெறுவது தொடர்பிலான 50 வரையிலான கோரிக்கைகள் இப்பிரிவுக்கு கிடைத்து அது 20 வீடமைப்பு திட்டங்கள், 15 பாடசாலைகள், 58 மத மையங்கள், 17 மயானங்கள், விளையாட்டு மைதானங்கள் மற்றும் ஏனைய நலன்புரி நடவடிக்கைகளுக்கான 94 கோரிக்கைகள் தொடர்பிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக பொது நடவடிக்கைகளுக்காக காணி விடுவிப்பது தொடர்பில் நீதிமன்றங்களில் விசாரிக்கப்படும் வழக்குகள் தொடர்பான 10 வெளிக்கள பரிசீலனைகள் மேற்கொள்ளப்பட்டது.



VI. அரசுக்குரிய காணிகளின் உரித்தை மீண்டும் அரசுக்கு பெறுதல் தொடர்பாக 1979/7 இலக்க அரச காணி (உரித்தை மீள பெறுதல்) சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய 23 பெருந்தோட்டக் கம்பனிகளால் நிர்வகிக்கப்படும் தோட்ட காணிகளில் அத்துமீறி குடியிருப்போர் மற்றும் அத்துமீறிய நிர்மாணங்கள் தொடர்பில் இப்பிரிவு நடவடிக்கை எடுக்கின்றது.

2013 டிசம்பர் 31 வரையான காலப்பகுதியில் 23 பெருந்தோட்டக் கம்பனிகள் ஊடாக நிர்வகிக்கப்படும் தோட்டங்களில் இவ்வாறான 600 சந்தர்ப்பங்கள் தொடர்பில் இப்பிரிவால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

VII. அரசுக்கும், பெருந்தோட்டக் கம்பனிகளுக்குமிடையே இருக்கும் குத்தகை ஒப்பந்தங்களின் 4(அ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கமைய அக்காணிகளை மூன்றாவது தரப்புக்கு, நாட்டின் அபிவிருத்தியை நோக்காகக்கொண்ட பல்வேறு செயற்பாடுகளுக்காக (உதாரணம் – தொலைத்தொடர்பு கோபுரங்கள் நிர்மாணித்தல், சிறிய அளவிலான நீர் மின்சார நிலையங்கள் அமைத்தல்) உபகுத்தகை அடிப்படையில் வழங்கும் இயலுமை பெருந்தோட்டக் கம்பனிகளுக்கு உள்ளது. இந்த நடவடிக்கைகள் அங்கீகரிக்கப்பட்ட குறித்த விதிமுறைகளுக்கமைய மேற்கொள்ளுதல் மற்றும் அது தொடர்பில் பொன்னான பங்குரிமையாளர்களின் அங்கீகாரம் பெறுவதற்குரிய நடவடிக்கைகள் இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகிறது.

2013 டிசம்பர் 31 ஆண்டுவரையான காலத்தில் 23 பெருந்தோட்டக் கம்பனிகளால் நிர்வகிக்கப்படும் தோட்டங்களிலிருந்து உபகுத்தகை அடிப்படையில் 10 காணித்துண்டுகள் அளவில் மேற்குறிப்பிட்ட செயற்பாடுகளுக்காக பல்வேறு தரப்பினருக்கு வழங்குவதற்காக பொன்னான பங்குரிமையாளர்களின் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதுடன் மேலும் இதுபோன்ற 20 கோரிக்கைகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.





VIII. பிரதேச பெருந்தோட்ட கம்பனிகளூடாக நிர்வகிக்கப்படும் தோட்டங்கள் மற்றும் தேயிலை தொழிற்சாலைகளின் செயற்திறன் மற்றும் அவற்றின் முன்னேற்றத்தை மேற்பார்வை செய்தல், தோட்டக் காணிகளின் அத்துமீறிய குடியிருத்தல் தொடர்பில் நீதிமன்றங்களில் விசாரிக்கப்படும் வழக்குகள் தொடர்பான வெளிக்கள பரிசோதனைகளை மேற்கொள்ளுதல் தொடர்பில் இப்பிரிவு நடவடிக்கை எடுத்து வருகின்றது. 2013 டிசம்பர் 31 திகதி வரையான காலத்தில் இவ்வாறான 09 வெளிக்கள பரிசீலனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

IX. நில அளவையாளர் நாயகம் திணைக்களம், மற்றும் பிரதேச பெருந்தோட்டக் கம்பனிகளின் பங்கேற்புடன் தோட்டக் காணிகளின் கெடஸ்ரல் நில அளவை நடவடிக்கைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், அதற்காக குறித்த நிதியொதுக்கீடுகளின் ஒரு பகுதி ஏற்கனவே கிடைத்துள்ளது. இது தொடர்பில் நில அளவையாளர் நாயகம் திணைக்களம், பிரதேச பெருந்தோட்டக் கம்பனிகளுடன் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.





X. மேன்மை தங்கிய ஜனாதிபதியிடமும், கௌரவ கைத்தொழில் அமைச்சரிடமும் பொது மக்களால் தோட்டத்துறை தொடர்பில் முன்வைக்கப்படும் பல்வேறு முறைப்பாடுகள் மற்றும் கோரிக்கைகள் தொடர்பில் பெருந்தோட்டக் கம்பனிகளின் பங்களிப்புடனும் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. 2013 டிசம்பர் 31 வரையான காலத்தில் இவ்வாறான 650 கோரிக்கைகள் தொடர்பில் இப்பிரிவு நடவடிக்கை எடுத்துள்ளது.

## தேயிலை, இறப்பர், தென்னந்தோட்ட (துண்டாடல் கட்டுப்பாடு) சபை

2005 ஆம் ஆண்டு 20 ஆம் இலக்க தேயிலை, இறப்பர் தோட்ட (துண்டாடல் கட்டுப்பாடு) (திருத்தம்) சட்டத்தினூடாக 1958 ஆண்டின் 2 இலக்க தேயிலை, இறப்பர் தோட்ட (துண்டாடல் கட்டுப்பாடு) சட்டம் திருத்தம் செய்யப்பட்டது. அந்த சட்டத்துக்கமைய தேயிலை, இறப்பர், தென்னந்தோட்டங்கள் துண்டாடப்படுதலை கட்டுப்படுத்துவதற்காக முறைப்படியான பொறிமுறை தயாரிக்கப்பட்டதுடன் அதனூடாக தென்னந்தோட்டங்களின் உரிமைகளை உரித்தளித்தல், விற்பனை மற்றும் பரிசளித்தல் அல்லது பரிமாற்றம் செய்வதற்காகவும் தேயிலை, இறப்பர், தென்னந்தோட்ட (துண்டாடல் கட்டுப்பாடு) சபையின் அனுமதி பெறப்பட வேண்டும். அந்த ஏற்பாடுகளை பின்பற்றாமல் செய்யப்படும் உரித்தளிப்புகள் வலுவற்ற உரித்தளிப்பாகும்.

2013 ஜனவரி மாதம் தொடக்கம் 2013 டிசம்பர் 31 வரை பணிப்பாளர் சபைக் கூட்டம் 13 ஐ நடாத்தியுள்ளதோடு கிடைத்துள்ள விண்ணப்பங்களின் விபரம் பின்வருமாறு.

| வருடம் | சபைக்கு கிடைத்துள்ள விண்ணப்பங்கள் | கையளிக்கப்பட்ட விதம் | விண்ணப்பித்த காணி அளவு ஏக்: ரூட்: பேர்ச்: | அனுமதி வழங்கப்பட்ட காணி அளவு ஏக்: ரூட்: பேர்ச் : |
|---|---|---|---|---|
| 2013 | 530 | 1. தனி அலகாக | 2,027 03 05 | 2,027 03 05 |
| | | 2. சபையின் ஒப்பந்தங்களுடன் பிள்ளைகளுக்கும் ஏனைய நபர்களுக்கும் / நிறுவனங்களுக்கும் கையளித்தல் | 10,473 00 33 | 6,443 02 18 |

கடந்த வருடத்தில் எஞ்சிய விண்ணப்பங்களின் எண்ணிக்கை மற்றும் அறிக்கையை பெற்றுக்கொள்வதற்காக அனுப்பியுள்ள விண்ணப்பங்கள் மற்றும் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் } 52

2013 ஆண்டுக்கான பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்களின் அளவு 586 ஆகும்.